www.padippakam.com

# புதுமை



இல: 6
சித்திரை - புரட்டாதி 1990

அரசியல் பொருளாதார கலாசார இதழ்.

Killers in the Air







Killers on the Sea


Killers on the Road

படிப்பகம்

www.padippakam.com

"சாதாரண பெண்களுக்குப்
பெரும் துணிச்சலும், தனியே
எதனையும் எதிர்த்துப் போராடும்
வல்லமையும், ஒற்றுமையாய் இயங்கவும்
இயலும் என்பதை நான் நிச்சயம்
நிரூபித்துக் காட்டுவேன்"

— ராஜனி —



புத்திஜீவிகளின் முக்கிய கடமை, புத்திஜீவிகளின் தலைமையை தேவையற்றதாக்குவதே.

www.padippakam.com



சுதந்திரம் என்பது எப்போதுமே மாற்றுக்கருத்தைக் கூறுவதற்கு உரிய சுதந்திரமே.

– ரோசா லுக்கஸம்பேர்க் –

# editorial

இலங்கை அரசும் புலி இயக்கத்தினரும் மீண்டும் வெகுவிரைவில் மோதலை தொடங்குவார்கள் என யாரும் நம்பியிருக்கவில்லை. இருபகுதியினரும் தத்தமது அதிகாரத்தை இஸ்திரப்படுத்த உடன்படிக்கைக்கு வருவார்கள் என மக்கள் நம்பியிருந்தனர். அத்துடன் பிரேமதாஸா மேல் நம்பிக்கை இருப்பதாக புலிகள் அடிக்கடி கூறிக்கொண்டதும், கிட்டத்தட்ட புலிகளின் பேச்சாளர் போல் இலங்கையரசு நடந்துகொண்டதும் தெரிந்ததே.

இருபகுதியினரும் மக்களுக்குத் தெரியாமல் மறைமுகமாகப் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டதுபோலவே, மறைமுகமாக யுத்தத்திற்கும் தயாராகிக் கொண்டிருந்தனர். எனவே இதில் யார் முதலில் மோதலை ஆரம்பித்தது என நாம் தலையை உடைக்கத் தேவையில்லை. அத்துடன் இவ்விரு பகுதியினருக்குள்ளும் ஒப்பந்த விரும்பிகளும், இராணுவத் தீர்வுவாதிகளும் உள்ளனர் என்பதும் தெரிகிறது. இச்சடுதியான யுத்தத்திற்கு இருபகுதியினரிடையேயுள்ள இராணுவத் தீர்வுவாதிகளே காரணமெனலாம். புலிஇயக்கத்தினர் தம்மை

www.padippakam.com

கொள்ள முடியவில்லை. (ஈரோஸ் இயக்கத்தை கலைத்துவிடும்படி புலிகள் கேட்டுக்கொண்டனர்)

இன்று நடக்கும் மோதல் புலிகளை அழிப்பதற்கான யுத்தமோ, தமிழ் மக்களைக் காப்பாற்றுவதற்கான போராட்டமோ அல்ல. ஆனால் முழு அழிவும் மக்களுக்கே.

எனவே இந்தப் போர் உடனடியாக நிறுத்தப்பட்டு, ஒரு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். உணவு, மருத்துவத் தடைகள் நீக்கப்பட்டு சகல உதவிகளும் வழங்கப்படவேண்டும்.

பேச்சுவார்த்தையில் அரசு, இயக்கங்கள் மாத்திரமின்றி, பிரஜைகள் குழுக்கள், மலையக பிரதிநிதிகள், பெண்கள் அமைப்புகள், மனிதஉரிமை ஸ்தாபனங்கள் பங்குகொள்ளவேண்டும். அத்துடன் இப்பேச்சுவார்த்தைகள் பகிரங்கமாக நடாத்தப்படவேண்டும்.

---

## — கண்டதும் கேட்டதும் —

அர்த்தமற்ற குரோதத்துடன் நடைபெற்றுவரும் இந்தப் பலப்பரீட்சையில் அப்பாவிப் பொதுமக்களின் எதிர்காலமே நாசமாக்கப்படுகிறது. இதனை தன்மானப் பிரச்சனையாகவோ அன்றி வீரத்தின் பலப்பரீட்சையாகவோ கருதாமல் சமூகத்தை அழிவிலிருந்து காப்பாற்ற உடனடியாக யுத்தத்தை நிறுத்துவதே சம்பந்தப்பட்ட சகலரின் கடமையாகும்.

பெ. சந்திரசேகரன்.

(மலையக மக்கள் முன்னணி)



படிப்பகம்

www.padippakam.com



# மூன்றாம் உலகின் புதிய ஏற்றுமதிப் பொருட்கள்.

மூன்றாம் உலக நாடுகளிலிருந்து மலிந்த விலையில் மூலப்பொருட்கள், உணவுப்பொருட்கள், வீட்டுமிருகங்கள், பறவைகள் மேலைநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யப்படுவது தெரிந்ததே. மேற்கூறிய இயற்கை வளங்களோடு, இயற்கையோடு நெருங்கிய தொடர்புடைய பெண்களும், குழந்தைகளும் தற்போது புதிய ஏற்றுமதிப் பொருளாக மாறிவிட்டார்கள்.

ஐரோப்பிய, அமெரிக்க ஜப்பானியச் சந்தையில் கீழைத்தேயப் பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும் கிராக்கி ஏற்பட்டதைத் தொடர்ந்து பலவிற்பனை ஸ்தாபனங்களும் தரகர்களும் காளான்கள் போல் முளைத்துள்ளார்கள். 'வளர்ந்துவிட்ட சமுதாயங்களில்' பெண்கள் சமவுரிமைக் கேட்டு நிற்பதாலும், ஆண்களுக்கு வேண்டியதுபோல் அடிமையாகச் செயற்பட மறுப்பதாலும், ஆண்களுக்கு 'அடக்கமும் பணிவும் கொண்ட'




படிப்பகம்

கீழைத்தேயப் பெண்கள் தேவைப்படுகிறார்கள். தேவைகளை நிவர்த்தி செய்வது தானே சந்தைமுறை பொருளாதாரத்தின் நோக்கம். எனவே விதம்விதமாகப் பெண்கள் மேலைத்தேய மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு அனுப்பப்படுகிறார்கள். பண்டங்களை விற்கும் நிறுவனங்கள் கையாளுவதைப் போல் இத் திருமண நிறுவனங்களும் புதுப்புது யுக்திகளைக் கையாள்கின்றனர். எல்லாவற்றிற்கும் மேலாக சமீபத்தில் ஒரு நிறுவனம் கீழைத்தேயப் பெண்களுக்குப் பின்வரும் விளம்பரத்தைக் கையாண்டது. "பாவித்து உங்களுக்குத் திருப்தியளிக்கவில்லையென்றால் திருப்பித் தரலாம்"

"மங்கையராகப் பிறப்பதற்கே_ நல்ல
மாதவம் செய்திட வேண்டுமடி"

—றஞ்சி —



www.padippakam.com

அன்பின் நண்பனுக்கு,

பலகாலமாக உன்னுடன் தொடர்பு இல்லாமல் போய்விட்டது. சென்னையில் EPRLF பத்மநாபா கொலை செய்யப்பட்டதை அடுத்து நீ தொலைபேசியில் வருத்தம் தெரிவித்தாய். அன்று நீ ஆழ்ந்த கவலையும், ஆத்திரமும், அதிர்ச்சியும் அடைந்திருந்தாய். உனது கவலையில் நான் பங்கு கொள்ளாதது வேறு மிகுந்த கவலையையும் ஆத்திரத்தையையும் தந்திருந்தது.

பத்மநாபாவின் இறப்பு, இலங்கை சோசலில புரட்சிக்கு ஓர் இழப்பு என்று பலவாறு சொன்னாய்.

இறந்தவர்களை பாய்ந்து குதறி எறிவது எனது நோக்கமல்ல. இது மனித நேயமும் அல்ல. ஆனால் நண்ப ஈழப்போராட்ட ஆரம்ப காலத்தில் ஏன் 87 வரைக்கும் பத்மநாபா ஒரு வித்தியாசமானவராக காணப்பட்டது உண்மைதான். தமிழர் போராட்டத்திற்கும் சிங்களமக்கள் போராட்டத்திற்கும் ஒரு தொடர்பு தேவை என்று கருதி, அதற்காக செயலும் பட்டார். மற்றைய கட்சிக்குள் நடந்தது போல் உட்கட்சிக் கொலைகளும் இவர்களிடத்தில் இல்லை எனலாம். ஆனால் 1987ல் இந்திய இராணுவத்துடன் கூட்டுச் சேர்ந்து புலிஇயக்கத்திற்கு எதிரான தாக்குதல் எனக்கூறி தமிழ் மக்களை பல்வேறு அநீதிகளுக்கும் அடக்கு முறைகளுக்கும் ஆளாக்கக் காரணமானார்.

எத்தனையோ இளைஞர்கள் கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டனர், பல பெண்கள் பாலியல் ரீதியான பலாத்காரத்திற்கு உள்ளாக்கப்பட்டனர். சிறுவர்கள் கட்டாயமாக பிடிக்கப்பட்டு, இராணுவ சேவையில் சேர்க்கப்பட்டனர்.

நண்ப, உனது களங்கமற்றவர் இந்தக்காலகட்டங்களில் தனது கைகளை இரத்தத்தில் நிறையவே தோய்த்துக் கொண்டார்.

இக்காலகட்ட கொடூர ஆட்சியைப் பார்த்து பல தமிழ் மக்கள் பழைய சிங்கள ஆட்சியாளர்களே மேல் என கூறியதும் கேள்விப்பட்டிருப்பாய்.

மன்னிக்க வேண்டும் நண்ப, என்னால் உன்போல் அழமுடியவில்லை. ஆனால் இக் கொலையைக் கண்டு ஆனந்தக் கூத்தும் ஆடவில்லை. பத்மநாபாவும் அவரது சகாக்களும் தண்டிக்கப்பட வேண்டியவர்களே. ஆனால்

அவர்களைத் தண்டிக்க மக்களைத்தவிர வேறு எவரும் உரிமையோ, அருகதையோ அற்றவர்கள் என்பதுதான் எனது கொள்கை.
அப்பாவிப் பொதுமக்கள் தோழர்கள், ராஜனி, டி சொய்சா போன்றோர் கொலை செய்யப்பட்ட போது ஏற்பட்ட ஆத்திரம், மனக்கவலை இக்கொலையின் போது எனக்கு ஏற்படாததை ஓரளவு புரிந்திருப்பாய் என நான் நினைக்கிறேன்.
பி.கு: ராஜனி திரனகமா நண்பர்களுடன் கூடி எழுதிய "முறிந்த பனைமரம்" வெளிவந்துள்ளது. பயனுள்ள புத்தகம் வாங்கிப் படிக்கவும்.

நண்பின்

S.B.தாசன்

---

# நாகரிகம், ஆஹா!

(Sipho Sepamla ஸிFோ ஸெபம்லா ; தமிழில்: மணி)

முதற்தடவையாக ஒரு அத்திப்பழத்தைத் தின்றபோது
ஈடன் தோட்டத்தை நினைத்தேன்
முதற்தடவையாக கடவுளிற் சித்திரத்ஈதக் கணடபோது
ஒரு வெள்ளையனை நினைத்தேன்
பூமியில் சைத்தானை முதற்தடவையாகச் சந்தித்தபோது
ஒரு கறுப்பனை நினைத்தேன்
உண்மையாகச் சொல்லப்போனால்
இது Bன்T [1] கல்வி மட்டுமல்ல
வெள்ளை நாகரீகமென்பார்களே அதில் ஒரு பகுதி

1 Bantu: தென்னாபிரிக்க நீக்ரோ தேசிய இனத்தவர் (பண்டு?)

www.padippakam.com

# முஸ்லீம் மக்கள்மேல் கைவைக்காதே!

சமீப காலமாக கிழக்கு மாகாணத்தில் பல முஸ்லீம் மக்களை புலி இயக்கமும், இலங்கை இராணுவமும் கொலை செய்துவருகின்றன. இக்கொலைகளுக்கு பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. பல்வேறு உதவிகள் நின்ற நிலையில் இந்திய இந்துமதக்கட்சிகளின் உதவியைப் பெறுவதற்கு புலி இயக்கமும், பலநாட்டு உதவிகள் குறைந்த நிலையில் இராணுவச்செலவை அரபுநாடுகளிலிருந்து பெறுவதற்காக இலங்கையரசும் இக்கொலைகளைச் செய்துவருவதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். இக்கொலைகள் நடந்த காலத்தில் இலங்கையரசின் பிரதிநிதிகள் அரபுநாடுகளில் கடன் வேண்ட சென்றிருந்தமையும் இங்கு கருத்தில்கொள்ளவேண்டும். அதேநேரத்தில் தமிழ்தேசியவாதத்தின்மூலம் முஸ்லிம்மக்களைத் தம்முடன் இணைக்க முடியாமல் போன புலி இயக்கத்தினர் முஸ்லிம் மக்களுக்கு எதிரான போக்கைக் கடைபிடித்து வந்ததும் கவனத்துக்குரியது. அத்துடன் சில கொலைகளுக்கும் புலி இயக்கத்தினர் உரிமை கோரியுள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன. கடந்த காலத்தில் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே இனக்கலவரத்தைத் தூண்டிவிட இலங்கையரசு பல்வேறு யுக்திகளைக் கையாண்டு வந்துள்ளது. குறிப்பாக "ஜிகாத்" என்ற மதவாத இயக்கத்திற்கு இலங்கையரசு ஆயுதஉதவி செய்துவந்துள்ளது.

முஸ்லிம் மக்களின் தனித்துவத்தை அங்கிகரிக்காமல், தமிழ் இயக்கங்கள் ஈழப்போராட்டத்தை அவர்கள் மீது திணித்து, பின் தமக்கு ஆதரவு கிடைக்காத நேரத்தில் அவர்கள்மீது இனவாதக் கொள்கையைக் கடைப்பிடித்தமை கவனிக்கப்படவேண்டும்.

முஸ்லிம் மக்களுக்கெதிரான கொலைகளையும், இனவாதத்தைத் தூண்டிவிடும் சக்திகளையும் நாம் கண்டிக்கிறோம். அத்துடன் சூழ்ச்சிக்குப் பலியான சில முஸ்லிம் குழுக்கள் தமிழர்கள்மேல் மேற்கொள்ளும் கொலைகளையும் கண்டிக்கிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

# ஆகஸ்ட் 90

-ராகவன்-

வஞ்சமும் சூதும்
நர்த்தனமாடும்
என்னரும் நாட்டின்
சேதி கேளீர்.

நெல்வளம் கொழிக்கும்
கிழக்கு மண்ணில்
வறுமையில் வாடும்
மண்ணின் மைந்தர்கள்
ஒருவரையொருவர்
அறுவடை செய்தனர்.

அதிகாரம் அங்கே
கை கொட்டிச் சிரிக்கும்
அடக்கப்படுவோர்
ஒருவரையொருவர்
அறுத்து நிற்பதில்
அதிகாரம் அங்கே
ஆட்சியில் நிலைக்கும்.

மண்ணில் எங்கும்
மனிதம் சாகின்ற
கொடுமை நிறைந்த
நாட்கள் இன்று.



படிப்பகம்

www.padippakam.com

பொன்னாய்க் கொடுக்கும்
தென்னாப்பிரிக்காவிலும்
சேதி ஒன்றுதான்_
ஒடுக்கப்படுகின்ற
மண்ணின் மைந்தர்கள்
தத்தம் தலைகளை
அறுத்து நிற்பர்.

காலம் காவமாய்
சாதியென்றும் சமயமென்றும்
மொழியென்றும் இனமென்றும்
மூக்கென்றும் முழியென்றும்
மக்களை என்றும்
பிரித்து வைப்பதில்
அதிகாரம் எங்கும்
ஆட்சியில் நிலைக்கும்.

---

## – கண்டதும் கேட்டதும் –

வடக்கு மாகாணத்துடன் இணைப்பு நிலையிலிருந்து கிழக்கு மாகாணத்தை விடுவித்துக் கொள்ள இப்போது அருமையான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. முதலில் கிழக்கைத் துப்பரவு செய்துவிட்டு இலங்கைப் படைகள் வடக்குக்குச் செல்லவேண்டும். ஈழம் என்றொன்று இருக்கமுடியாது. அதுபற்றிய கேள்விக்கே இடமில்லாமல் செய்ய இப்போது பொன்னான வாய்ப்பு கிடைத்துள்ளது. அதை அரசாங்கம் செவ்வனே பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.


சு.க. எம்.பி

www.padippakam.com

# எல்லோரும் மீட்பர்களே

— இரா. ரஜீன்குமார் —

சிலுவை சமந்த
மீட்பன் ஒருவன்
என்றோ ஒரு நாள்
போயினன் என்று
ஆயுதம் சமந்த
மீட்பர்கள் வந்தனர்
மக்கள் மீதே
சிலுவை அடித்தனர்
ஒன்றாய்
பத்தாய்
பலவாய் மக்கள்
சிலுவை சமந்த மீட்பர்களாயினர்



கனம் தங்கிய
கனவான்களே!
மனம் திறந்து
விண்ணப்பிக்கின்றேன்
உங்கள் தராசுகள்
சரியானவையே
அதில் மானிட வலுக்கள்
நிறுக்கும் போது
படிகளைக் கொஞ்சம்
பரிசோதியுங்கள்!

–1989.



படிப்பகம்

# இடதுசாரிப்"பாசிசத்தனமும்", யாழ்ப்பாணத்தானும்

- S.B.தாசன் -

சமீப காலமாக "யாழ்ப்பாணத்தான்" என்ற பதம் அரசியல், இலக்கிய மற்றும் சந்திப்புக்களிலும் சில புத்திஜீவிகளால் அடிக்கடி பாவிக்கப்பட்டு வருகிறது. "யாழ்ப்பாணத்தாருக்கு காணாது", "அவன் அடிவாங்கினாத்தான் திருந்துவான்", "அவனைத் திருத்த முடியாது" போன்ற கோசங்கள் இந்த பரிகத்த ஆத்மாக்களால் அடிக்கடி பாவிக்கப்படுகின்றன. "யாழ்ப்பாணத்தான்" என்னும் பதத்தின் அரசியல், சமூக, பொருளாதார, உளவியல், மனிதவியல் ரீதியாக ஆராய்வது எனது நோக்கமல்ல, அது என்னால் சாத்தியமானதுமல்ல. எனது முக்கிய நோக்கம், எல்லாப்பிரச்சனைக்கஞக்கும் அந்த யாழ்ப்பாணத்தின் மீது பழியை சுமத்திவிட்டு ஒழிந்து கொள்ளும் இந்த புத்திசாலிகளை சாடுவதுதான்.

அதிகமாக மேற்படி பதத்தை அடிக்கடி உபயோகிக்கும் இந்த புத்திஜீவிகள் யார் எனப் பார்ப்போமாயின் இவர்கள் எம்முடனே கூடியிருக்கும் நம் "இடதுசாரிகள்"தான். இவர்கள் அடிக்கடி பாவிக்கும் மார்க்சிச, புரட்சிகர பதங்களில் இவர்களின் பேச்சுத் திறமையாலும், இவர்களின் உண்மையான குணாம்சங்களை தெரிந்து கொள்ள முடிவதில்லை. சமீபகாலத்தில் யாழ்ப்பாணத்தில் தேர்தலில் நின்றும் மற்றும் தமக்கு யாழ்ப்பாணத்தில் மக்கள் ஆதரவு இல்லாது போனதாலும் ஏற்பட்ட ஆகாதனத்தின் வெளிப்பாடே இந்த "யாழ்ப்பாணத்தான்" வசை பாடல்.

ஒரு குறிப்பிட் இனத்தையோ அல்லது ஒரு மக்கள் குழுவினரையோ ஒட்டு மொத்தமாக "பிற்போக்கு வாதிகள்", "சகல பிரச்சனைகளுக்கும் காரணகத்தாக்கள்" என பாகுபடுத்துவது மார்க்சிச கண்ணோட்டத்திற்கு ஒவ்வாதது. மாறாக இப்படியான ஒரு கண்ணோட்டம் பாசிசத்தன்மைக்கு வெகு நெருங்கியது. மேற்படி கோட்பாட்டைத்தான் சர்வதேசங்களிலுமுள்ள இனவாதிகளும் பாசிஸ்டுகளும், நிறவெறியர்களும் உபயோகிக்கிறார்கள் என்பதை இவர்கள் உணர வேண்டும்.

யாழ்ப்பாண சமூகத்தின் தனித்தன்மை, அவனது தனிக்கலாச்சாரம், அதற்கும் யாழ்ப்பாண பொருளாதாரத்திற்கும் உள்ள

www.padippakam.com

தொடர்பு போன்றன ஆராயப்பட வேண்டியது ஒன்று.( இது பற்றி இன்னும் போதுமான அளவும் பிரயோசனமான அளவும் ஆய்வு செய்யப்படவில்லை.)

இதை விடுத்து "ஆடத்தெரியாதவன் மேடை சரியில்லை" என்பது போல் ஒட்டு மொத்தமாக பிரச்சனைக்கு யாழ்ப்பாணத்தான் என்ற பலிக்கடாவை பலியிடப் பார்ப்பது எந்தவிதத்திலும் ஒத்து வராது என்பதை இந்த "இடதுசாரி" நண்பர்களுக்கு கூறிவைக்க விரும்புகிறோம்.

ஆனால் "யாழ்ப்பாணத்தான்" என்ற பதத்தின் ஒரு வித "மேலாதிக்கத்தன்மை", "சாதிவெறி", "சுயநலத்தன்மை" போன்ற பிற்போக்குவாத குணாம்சங்கள் அடங்கியிருப்பது உண்மைதான். அதற்கான காரணங்களை ஆராய்வதுடன் அதற்கு எதிராக பொருளாதார கலாச்சார போராட்டத்தை நடத்துவதும்தான் எமது முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும். மாறாக பிற்போக்கு வாதிகளின் கோசங்களை நமதாக்கக் கூடாது.

நண்பர்களே, கடந்த காலத்தில் எல்லாப்பிரச்சனைகளுக்கும் ஒரு இனத்தின் மேல் பழியைப்போட்டு அந்த இனத்தையே அழித்த





படிப்பகம்

ஒரு பாசிச ஆட்சி நடந்த நாட்டில் நாம் வாழ்கிறோம். அந்த பாசிச கட்சியுடனோ அல்லது வேறு எந்த பாசிச இயக்கங்களுடனோ நாம் உங்களை ஒன்றுபடுத்த நாம் முயற்சிக்கவில்லை. அது பிழையானதுமாகும். உங்கள் பிழையினால் விளையக் கூடிய ஆபத்துக்களையும் உங்கள் பிழையான அணுகு முறைகளையும் சுட்டிக் காட்டவே விரும்புகின்றேன் மற்றும் யாழ்பாணத்தானின் ஆணவத்தால் பாதிக்கப்பட்ட மலையக, மட்டக்கிளப்பு, வன்னி மக்கள் இப்பதத்தை ஒரு வித குணாம்ச குறியீடாக பாவிப்பது நியாயமானதாக இருக்க முடியும். மாறாக "யாழ்ப்பாணத்தான்" என்ற அரசியல் கோசம் பிழையானதும் ஆபத்தானதும் என்பதையும் நீங்கள் உணர வேண்டும்.

---

## — கண்டதும் கேட்டதும் —

புதிய தமிழ் அகராதிச் சொற்களும் அதன் அர்த்தங்களும்.

எமது தரப்பில் சேதம் எதுவும் இல்லை = நிச்சயமாக உண்டு

வெற்றிகரமாக பின்வாங்கினர் = விரட்டி அடிக்கப்பட்டனர்

அப்பாவிப் பொது மக்கள் = மற்ற இயக்கங்களினால் கொல்லப்பட்டவர்கள்

துரோகி = தங்கள் இயக்கத்தால் கொல்லப்பட்டவர்கள்.

பதுங்கியிருந்து தாக்குதல் = மற்ற இயக்கம் இவர்கள் மீது மேற் கொண்ட தாக்குதல்.

நேரடி மோதல் = இவர்கள் பதுங்கியிருந்து தாக்குதல்.

அரசியல் அவதானிகள் = செய்தி எழுதியவரும் வாசித்தவரும்.

பொது மக்கள் = இவர்களின் ஆதரவாளர்கள் மட்டும்.

கட்டாய ஆட்சேர்ப்பு = மற்ற இயக்கம் ஆட்சேர்க்கும் விதம்.

இணைந்து கொள்ளல் = தங்கள் இயக்கத்திற்கு ஆட் சேர்க்கும் முறை.

( கனடாவில் இருந்த வெளிவரும் தாயகம் – இல.29 – என்ற பத்திரிகையில் இருந்து. )

www.padippakam.com

# நோய்க்காக மருந்தா?

இன்றைய உலகில் விஞ்ஞானமானது சகலதுறைகளிலும் வளர்ச்சியடைந்துள்ளது. இவ்வளர்ச்சியானது மனிதரின் வாழ்க்கையில் பல்வேறு நன்மைகளையும், தீமைகளையும் ஏற்படுத்தியுள்ளது. வைத்தியதுறையும் இதற்கு விதிவிலக்கானதல்ல. இன்று எமக்குக்கிடைக்கும் செய்தியின்படி, இரசாயன மருந்துகளால் ஏற்படும் கெடுதிகளையும், பலர் அதற்கு அடிமையாகி இந்த மருந்துகளே தமக்குத்துணை என்ற முடிவுடன் வாழ்க்கை நடாத்துவதையும் அறியக்கூடியதாக இருக்கின்றது. இதுமாத்திரமல்லாமல் இன்றைய கணக்கெடுப்பின்படி- ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தது பத்து வகையான மருந்துகளை முன்கூட்டியே கைக்காவலாக சேர்த்துவைத்திருப்பதுவும், நோய்வருமென்ற அறிகுறிகள் அல்லது உடம்பு களைப்புற்று சோர்வடையும்போது சேமித்து வைத்திருக்கும் மருந்துகளையோ அல்லது இரசாயன உயிர்சத்து மாத்திரைகளையோ (Vitamines) பாவிப்பதுவும் வழக்கமாகிவருகிறது. எனவே இராசாயன மருந்தானது நமது வாழ்க்கையில் ஓர் முக்கிய 'தோழனாக' மாறிவிட்டிருக்கின்றது.

உலக வைத்தியக்குழுவினுடைய

# மருந்துக்காக நோயா?

1989ம் ஆண்டு அறிக்கை, உலகம் பூராகவுள்ள நோய்களில் 10% வீதமான நோய்களை மட்டுமே இராசாயன மருந்தால் மாற்றக்கூடியதாகவுள்ளதென்று கூறுகிறது.

## நோயும் மனிதனும்

மனிதன் நோய்வாய்ப்படுவதும் அதற்கு வைத்தியம் செய்வதும் இன்று நேற்று தொடங்கியதல்ல. ஆதிகாலம் தொட்டே நோய்களும், மருந்துகளும் இருந்தன. அன்றைய மனிதர்கள் நோய்க்கு மருந்தை மட்டுமல்ல சத்திரச்சிகிச்சை கூட செய்திருக்கிறார்கள் என்பது நிருபிக்கப்பட்டுள்ளது. ஆதிமனிதனின் முன்னேற்றமான அடிப்படை வளர்ச்சியே இன்றைய



படிப்பகம்

விஞ்ஞான வளர்ச்சியாகும். ஆதிமனிதர்கள் எமது உடலைப்பற்றி நன்றாக அறிந்திருந்ததனால் தான் அவர்களின் வைத்தியமுறையும் வெற்றியடைந்தது என்று கூறலாம்.

பொதுவாக எமது உடலை எடுத்துக்கொண்டால் எமது உடலில் இயற்கையாகவே நோய்க்கிருமிகளை எதிர்க்கும் சக்தி (Antibody) இருக்கிறது. எமது இரத்தத்தில் இரண்டு விதமான கலங்கள் இருக்கின்றன. இதில் செங்கலம் இரத்தத்துக்கு சிவப்புநிறத்தைக் கொடுப்பதுடன், (Hömoglobin) நாம் சுவாசிக்கும் பொழுது உட்கொள்ளும் பிராணவாயுவை எமது உடலிலுள்ள எல்லா உறுப்புகளுக்கும் எடுத்துச் செல்கின்றது. இது எலும்புச்சதை (Marrow)யில் இருந்து உருவாக்கப்பட்டு 4மாத இடைவெளிக்குப்பின் உடம்பிலிருந்து ஈரல், மண்ணீரல் மூலமாக வெளியேற்றப்படுகின்றது. ஆனால் 600 செங்கலத்திற்கு 1 என்ற விகிதத்தில் (600:1) வெண்குருதிக்கலங்கள் இருக்கின்றன.

அடிப்படையில் பல்வேறுபட்ட வடிவங்கொண்ட வெண்கலங்கள்- எலும்புச்சதை, மண்ணீரல்(Spleen) Lymphatic gland சுரப்பிகளிலிருந்து உருவாக்கப்படுகின்றது. இவைகளின் முக்கிய தொழில் உடம்பினுள் வரும் நோய்க்கிருமிகளை சுற்றி வளைத்து அழிப்பதும் அத்துடன் (கிருமிகளால்) பாதிக்கப்பட்ட கலங்களை திரும்பவும் பழைய நிலைக்கு கொண்டுவருவதும் ஆகும்.

எமது உடம்பில் ஞாபகச்சக்திக் கலங்கள் என்று பல கலங்கள் உள்ளன. இவைகளை ஓர் கொம்பியூட்டருக்கு ஒப்பிடலாம். எமக்கு ஓர்முறை ஓர் நோய் வந்தால் அதைப்பற்றிய முழுவிபரங்களையும் இந்த ஞாபகச்சக்தி கலங்களில் சேமித்து வைத்துக் கொள்கின்றது. இந்த நோய் திரும்பவும் வர முயற்சிக்கும் பொழுது உடனடியாக இந்த ஞாபகச்சக்திக்கலங்களிலிருந்து அறிவித்தலை எடுத்து, இக்கிருமியை அழிப்பதற்கு எப்படிப்பட்ட எதிர்ப்புச்சக்தி வேண்டும் என்று அறிந்து உடனடியாக இந்த எதிர்ப்புச்சக்தியை மேலதிகமாக உற்பத்திசெய்து

அக்கிருமிகளை ஆரம்பத்திலேயே அழித்துவருகின்றது. இதனால்த்தான் எமக்கு வரும் நோய்கள் ஒருமுறைக்கு மேல் வராமல் இருப்பதுவும் காரணமாகும். உதாரணம்:- சின்னமுத்து. இந்தஞாபகச்சக்திக்கலங்கள் இந்த நோய்களைப்பற்றிய அறிக்கைகளை 8 லிருந்து 10 வருடம் வரை வைத்திருக்கக் கூடியதாகவுள்ளது.


எமது உடம்பிலுள்ள எதிர்ப்புச்சக்தி, நாம் பிறந்து கிட்டத்தட்ட 1 1/2 மாதத்தில் இருந்து 2 மாதங்களின்பிற்பாடுதான் தனது தொழிலைத்தொடங்குகிறது. இதனால் இந்த 1 1/2, 2 மாத இடைவெளியில் குழந்தைகளில் உடம்பில் எதிர்ப்புச்சக்தி இல்லாததால் எல்லா வருத்தங்களும் வரக்கூடியதாகவுள்ளது. ஆனால் இயற்கை இவர்களை தனியாக விட்டுவிடவில்லை. குழந்தைகள் பிறந்தவுடன் இயற்கையின் நிர்ப்பந்தத்தின்படி தாய்ப்பாலைத்தான் அருந்தவேண்டும். தாய்ப்பாலில் ஒரு குழந்தைக்குவேண்டிய எல்லாச் சத்துவகைகள் மாத்திரமல்லாமல் தாய்ப்பாலின் மூலம் தாயிடமுள்ள எல்லா எதிர்ப்புச்சக்திகளும் பிள்ளைக்கு கிடைக்கின்றது. தாய்ப்பாலில் இரண்டு விதமான ஜீவசத்துக்கள் உள்ளன. அல்வுமின் (Albumin)- இதில் குழந்தைக்கு வேண்டிய எல்லாச்சத்துக்களும் அடங்கியுள்ளது. (Globuline) குளோபுலின் இது குழந்தைகளுக்கு தாயிடம் இருந்து கிடைக்கும் (Antibody) எதிர்ப்புச்சக்தியாகும். இதை நாம் மிருகங்களில் குறிப்பாக மாட்டில் கன்று போட்டவுடன் கறந்தெடுக்கும் பால் (கடும்புபால்) இதையே காட்டுகின்றது.

## மருந்தும் மனிதனும்

ஆதிகாலத்தில் மனிதன் இயற்கையின் உதவியுடன் நோய்களுக்கு மருந்து செய்தான். அவன் அன்றே மூலிகைகளைப்பற்றியும் அதன் சக்திகளைப்பற்றியும் அறிந்திருந்ததால் அவன் அன்றுதொட்டு நோய்களுக்கு வெற்றிகரமாக மருந்து செய்யமுடிந்தது.

விஞ்ஞான வளர்ச்சியின் மூலம்

www.padippakam.com



இன்று நோய்களையும் நோய்களை ஏற்படுத்தும் கிருமிகளையும் நன்றாக அறியக்கூடியதாகவிருப்பதால் நோய்க்கிருமிகளை நேரடியாகஅழிக்கக்கூடியதாகவுள்ளது. இப்படி நேரடியாக நோய்கிருமிகளை அழிக்க வேண்டுமேயானால் நாம் இரசாயன மருந்துகளையே நாடவேண்டியுள்ளது. பொதுவாக இரசயனமருந்துகள் எல்லாம் நச்சத்தன்மையைக் கொண்டுள்ளதால் இவைகள் தமது வேலை முடிந்தவுடன் எமது உடலிலிருந்து (இரத்தத்திலிருந்து) வெளியேற்றப்படவேண்டும். இரத்தத்தில் உள்ள இந்த நச்சுத்தன்மை ஈரலின் மூலம், அதில் உள்ள உப்புத்தன்மை சிறுநீரகத்தின் மூலம் வடிகட்டப்படுகின்றது. இப்படியாக வடிகட்டிய பொருட்கள் முழுமையாக வெளியேற்றப்படாதபட்சத்தில் உடலில் தங்கி உடலிலுள்ள உறுப்புகளையும் பாதிக்கின்றது. இதை நாம் (Sideaffect) பக்கவிளைவு என்று அழைக்கின்றோம். இரசாயன மருந்தில் பக்கவிளைவு இல்லாத மருந்து இல்லை என்றே



படிப்பகம்

சொல்லாம். ஏதோ ஓர் வகையில் உடம்பில் ஓர் தாக்கத்தை இது ஏற்படுத்துவது 'மாத்திரமல்லாமல் உடம்பிலுள்ள நல்ல கிருமிகளையும் அழித்து எமது உடலிலுள்ள எதிர்ப்புச்சக்திகளையும் வலிமை இழக்கச் செய்கின்றது. அத்துடன் அன்ரிபியோரிக போன்ற (Antibiotic) சில இரசாயன மருந்துகள் எம்மைத் தமக்கு அடிமையாக்கி கொள்ளுவதுமல்லாமல் எமது வருங்கால சந்ததிகளுக்குக்கூட கேடு விளைவிப்பதாகவும் உள்ளது. இதை இன்று பல இடங்களில் பார்க்கக் கூடியதாகவுள்ளது. உ+ம். ஊனமான குழந்தைகள் பிறப்பது .

எமது உடம்பில் முக்கியமான உறுப்புகளில் ஒன்றான சிறுநீரகம் இரசாயன மருந்து மூலம் பாதிக்கப்பட்டு சிறுநீரகம் இல்லாமல் வாழ்பவரின் தொகையே இன்று பல ஆயிரக்கணக்காக உள்ளது. இதை நாம் வாழும் நாடாகிய ஜெர்மனிய நாட்டில் முன்சன் நகரில் (München) 10,000த்துக்கு மேற்பட்ட மனிதர்கள் சிறுநீரகம் இல்லாமல் கிழமைக்கு 2-3 நாட்கள் இரத்தத்தை செயற்கைமுறையால் சுத்திகரிக்கச் செய்துகொண்டு வாழ்கின்றார்கள். இவர்களில் அதிகமானவர்கள் இராசாயன மருந்தின் பாதிப்பால் சிறுநீரகத்தை இழந்தவர்கள், அத்துடன் ஈரல் நச்சுத்தன்மையை இரத்தத்தில் இருந்து வடிகட்டி எடுப்பதால் ஈரல் பாதிக்கப்படுகின்றது. ஈரலில் பாதிப்பு ஏற்பட்டால் பல விளைவுகள் ஏற்படுகிறது. உ+ம். நீரழிவு

ஆனால் இயற்கை மூலிகை மருந்துகளால் மேற்படி தாக்கங்கள் எமக்கு இல்லை. இயற்கையாகக் கழிவுப் பொருட்களை வெளியேற்றும் வழியாக எமது உடல் இவைகளையும் வெளியேற்றிவிடுவதால் இயற்கை வைத்தியத்தில் ஆபத்தே இல்லை என்றே சொல்லாம். இன்று எமது வாழ்க்கையில் சிறு வருத்தத்துக்கெல்லாம் வைத்தியரிடம் செல்வதும் நாமாகவே மருந்துகளை வாங்கிப் பாவிப்பதும் சர்வசாதாரணமாகிவிட்டது. மருந்து நோய்க்காக அல்லாமல் நோயை உண்டாக்குவதற்காகவல்ல.

(வளரும்)

— வாணி —

www.padippakam.com

"ஒரு நாள்
துப்பாக்கிகள் என்னை மௌனிக்கப்
பண்ணிவிடும். ஒரு வெளியாளால்
அல்ல, இந்த என் சமூகத்தின்
கர்ப்பப்பையில் உருவான ஒரு
மகனால் - என் வாழ்வோடும்
வரலாற்றோடும் பிணைந்த இந்த
மண்ணின் மகள் ஒருத்தியால் இந்தச்
சாவு என்னை வந்து சேரக்கூடும்".

—ராஜனி—



ராஜனி



படிப்பகம்

www.padippakam.com

## மன்னிப்புக் கோருகிறோம்.

மீண்டும் புதுமை காலம் தாமதமாகி வெளிவந்துள்ளது. பல நண்பர்கள் இதனால் ஆத்திரம் அடைந்துள்ளார்கள். புதுமைக்கும், காலதாமதத்திற்கும் நெருங்கிய தொடர்பிருந்தாலும், இம்முறை உண்மையிலேயே எமது சக்திக்கு அப்பாற்ப்பட்ட காரணங்களே காலதாமதற்திற்கு வழிவகுத்தது. அத்துடன் புதுமை 5 சிறப்பாக வெளிவர ஆக்கமும் ஊக்கமும் தந்து உதவிய ஒரு நண்பர் வேறு நாடு சென்றுள்ளமையும் இதற்கு ஒரு காரணமாகும். அடுத்த தடவையிலிருந்து புதுமை ஒழுங்காக வெளியிட நாம் உறுதி எடுத்துள்ளோம். இதற்கு ஆக்கதாரர்களுது உதவியும் தேவை.

நன்றி. _ ஆசிரியர் குழு.

## — கண்டதும் கேட்டதும் —

.... ஒரு வீட்டின் படத்தைக் கொடுத்து விட்டு சில பொருட்களையும் கொடுத்து, வீட்டிற்கு உள்ளே இருக்க வேண்டிய பொருட்களை வீட்டின் உள்ளேயும், வெளியே அல்லது தோட்டத்தில் இருக்க வேண்டிய பொருட்களை வீட்டுக்கு வெளியேயும் வைக்குமாறு கேட்க்கப்படுகிறது. எல்லாக் குழந்தைகளும் சரியாக செய்து விட்டார்கள் ஆனால் பாவம் இனம் காணுவதில் "அறிவு குறைந்த" தமிழ் குழந்தை மாத்திரம் தவறுவிட்டு விட்டது. எனவே அக் குழந்தை விசேட உதவி தேவையெனத் தீர்மானிக்கப்படுகிறது. அது சரி அந்த குழந்தை விட்ட தவறு என்ன என்று கேட்கத் தொடங்குகிறதா ?

"வீட்டிற்கு வெளியே நாயைத் தூக்கி வைத்ததுதான்"

"சுவில்:_ சிறுவர் பாடசாலையில் தமிழ் பிஞ்சுகளின் வேதனை" என்று மூர்த்தி மாஸ்ரர் அவர்களால் மனிதத்தில் இல(6) இடம் பெற்ற கட்டுரையில் இருந்து.



படிப்பகம்

www.padippakam.com

# மலையக மக்களை நாடுகடத்தாதே!

" எங்கள் நாடுகள், ஏழைநாடுகள், ஈராக் மீதான பொருளாதாரத்தடை பணக்கார நாடுகளுக்கே சரிவரும். நாங்கள் தொடர்ந்து தேயிலையைப் பறிக்கவேண்டும், விற்கவும் வேண்டும்." — ரஞ்சன் விஜயரத்ன —

யார் இந்த மனிதர்? கொடூரமான மூன்றாம் உலக நாடுகளைச் சுரண்டும் ஏகாதிபத்திய அமெரிக்காவினதும் மற்றைய அடிவருடிகளினதும் ஈராக் மீதான பொருளாதாரத் தடையை தாமும் நடத்த முடியாமல் இருப்பதாகக் காட்டுபவர் யார்?

இந்த விஜயரத்னா தான் பாதுகாப்பு அமைச்சையும், பெருந்தோட்டத்துறை அமைச்சையும் கையில் வைத்திருப்பவர். ஸ்ரீ லங்கா பேரினவாத அரசானது இவர் மூலமாகத்தான் திட்டமிட்டபடி மலையகமக்களின் போராட்டங்களை நசுக்கி வருகிறது.

150 வருடங்களாக 5 தலைமுறைக்கு மேல் இலங்கையின் மாலை நாட்டினை வளப்படுத்தி, நாட்டின் முதலாவது அந்நியச் செலவாணியை ஈட்டிக்கொடுத்துக் கொண்டிருக்கும் மக்களில் மீண்டும் ஒரு இலட்சம் பேரை நாடு கடத்த ஸ்ரீலங்கா பேரினவாத அரசு நடவடிக்கை எடுக்கிறது. மலையக மக்களின் சிறு எதிர்ப்புகளும் கொடூரமாக அடக்கப்படுகின்றன. கேட்பாரற்று எங்கும் கைதுகள் தொடர்கின்றன.

ஒன்றரை நூற்றாண்டுகளுக்கும் முன்னர் தென்னிந்தியாவிலிருந்து ஆசைவார்த்தைக் காட்டி நயவஞ்சமாக அழைத்துவரப்பட்ட மக்களின் வாழ்வு— அற்று தொடங்கி இன்றுவரையும் துயரமும் கொடூரமும் தான். என்றும் மறுக்கப்பட்டு, மறைக்கப்பட்ட இவர்களின் வாழ்வின் பிரச்சனைகளையும், போராட்டங்களையும் வெளியில் கொண்டுவருங்கள்.

காலகாலமாய் மக்களின் தலைவிதியை யார்யாரோ எழுதியபடி. இவர்கள் மனிதர்கள் வருமபியபோது ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்படும் பண்டங்களல்ல. இவர்கள் உதிரத்தில் வளம் பெற்ற மலையகம் இவர்களுக்கே சொந்தம்.


படிப்பகம்

# மலைத்துளிர்ப்பு



"லயன்கள்"
எங்களுடையவையல்ல
தூங்குவதற்கு மட்டுமே
தூக்கம் தீண்டுவதில்லை
வயிறுகள் இரைவதால்
அவசரம்
வயிற்றை நிரப்ப
துரிதமாக தொழிற்படும்
கைகள்
கூடைகள் நிறையும்
வயிறுகள் அல்ல

தேயிலை துளிர்க்கும்
கனவுகளல்ல
கனவுகள் கூட
எங்களுக்கில்லை

எங்கள் தராதரம்
கிழிசல்களில்
கிழிசல்கள் கிழியும்
மாற்றுவதற்கில்லை
கிழிசலினூடே
தெரிகின்ற தொடையிலும்
இரத்தம் உறிஞ்சிய
அட்டைகளின்
கண்கள்மெய்க்கும்
அனுதாபத்திலல்ல
தாபத்தில்

பொறுமைக்கும்
எல்லையுண்டு
இன்று
எல்லைக்கே
பொறுமையில்லை

www.padippakam.com

ஆம்
நாம்...
வாழ்வதென்றால்
கடந்தேயாக வேண்டும்
இந்தச் சகதியை
அட்டைகளை நசித்தபடியே.

- கல்யாணி -

# துயரும் புழுக்கள்

- சகன் -

கிணற்றுக்குள் விழுந்து
எடுக்க முடியாதிருக்கும் வாளி

ஒவ்வொன்றாகச் சேகரித்த
எனது மகனின் மாபிள்கள்

செழும்பு மண்டிக் கறுத்துப்போன
செப்புக்குடம் – சில்வரைக் காசுகள்
குஞ்சு மீன்கள் – இவை பற்றி
(என்னைப் பாடவிடுங்கள்)

வியர்க்கும் வெக்கையிலும்
இறுக்கமாகப் போர்த்திருக்கும் ஆடை
இரத்த வாடை வீசும் உள்ளங்கி
துப்பரவாக்கப்படாத
மாட்டுக் கொட்டிலினுள், அருகே
வண்டியில் ஏற்றப்படாது
குமிந்திருக்கும் எருக்கும்பி

பிடியற்று
பாதி புதையுண்ட
கறள் பிடித்த கத்தி – இவை பற்றி
(என்னைப் பாடவிடுங்கள்)



படிப்பகம்

www.padippakam.com

# கிழக்கு - மேற்கு ஜேர்மன் இணைவு.

— ராகவன் & கான் —

மேற்கு ஐரோப்பிய, அமெரிக்க நாடுகள் என்றவுடன் அவர்களின் ஒப்பற்ற ஜனநாயகம், சாதனை புரியும் தொழில் நுட்பம், மதிக்கப்படும் மனித உரிமைகள், சுதந்திரமான தொடர்புச் சாதனங்கள், நிரம்பி வழியும் பணம், உணவுப் பொருட்கள் என்பவையே ஒரு மூன்றாம் உலக வாசிக்கு உடன் மனதில் தோன்றும். இதையேதான் இந்நாடுகளில் வாழும் மக்களும் நம்புகின்றனர். தாம் நவீன தொழில் நுட்பம் வாய்ந்த தொடர்புச்சாதனங்கள் இங்கு மக்களின் கருத்துக்களை பெரும்பாலும் தீர்மானிக்கின்றன. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் கிழக்கு மேற்காக பிரிக்கப்பட்ட ஜேர்மனி 40 வருடங்களின் பின்னர் கடந்த ஆண்டு இறுதியிலிருந்து மீண்டும் இணைவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கோபர்ச்சோவின் பிரல்ரோரிக்கா_கிளால்நொவ்ற உள்நாட்டிலும், நிறைய உள்ள நாகரீக மக்கள் என்கின்றனர். 'ஜனநாயகத்திலுள்ள' வாக்களிக்கும் உரிமை மூலம் ஒரு ஆட்சியை அமைப்பதற்கும், இவ்வாட்சி மக்களின் கருத்துக்களுக்கு விரோதமாக செயற்பட்டால் அடுத்த தேர்தலில் — இவ் வாக்களிக்கும் உரிமை மூலமே அதை தூக்கியெறியலாம் என நம்புகின்றனர். ஆனால் சக்தி





படிப்பகம்

www.padippakam.com

வெளிநாடுகளிலும் குறிப்பாக கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்படுத்திய திடீர் திருப்பங்களில், கிழக்கு-மேற்கு ஜேர்மனியின் இணைவிற்கான சாத்தியத்தை ஏற்படுத்தியதும் அடங்கும்.

## நவம்பர் 9 புரட்சி ?

"நாங்கள் தான் மக்கள்"- wir sind das volk - நீங்களல்ல, நாங்கள்தான் எங்கள் தலைவிதியை நிர்ணயிப்போமென ஆயுதமில்லாமல் கிழக்கு ஜேர்மன் மக்கள் வீதியில் இறங்குகின்றனர். ஒவ்வொரு நாளும் எதிர்ப்பு ஊர்வலங்கள் தொடர்கின்றன. கிழக்கு ஜேர்மன் அதிபர் பதவி விலகுகிறார். தொடர்ந்து வெளி உலகு மறுக்கப்பட்டதின் சின்னமான பேர்லின் சுவர் நவம்பர் 9ந்திகதி உடைக்கப்படுகிறது. மக்கள் ஜனநாயகம் வந்துவிட்டது. பத்திரிகைச் சுதந்திரம், கிடைத்துவிட்டது இன்னும் விரும்பும் பிரதிநிதிகளை தாமே தெரிவு செய்யலாம் என்று ஆனந்தமடைகிறார்கள்.

நாங்கள் தான் மக்கள். மக்களே இங்கு அதிகாரத்திலுள்ளனர் என்று கூறிக் கொண்டிருந்த கோனேக்கரின் S.E.D கட்சி அதிகார வர்க்கத்தினருக்கு எதிரான கிழக்கு ஜேர்மன் மக்களின் போராட்டம் வெற்றி பெற்றது. இவ் நவம்பர் 9ஐ மாபெரும் புரட்சி நாளென இங்கு பெரும் பிரச்சாரம் செய்யப்பட்டது. ஆனால் இதே தினத்தில் - 56 வருடங்களுக்கு முன் 1933 நவம்பர் 9ல், முதன் முதலாக யூதர்கள் தாக்கப்பட்டதும், கடைகள் உடைக்கப்பட்டதையும் மக்கள் மறந்து விட்டனர்.






படிப்பகம்

www.padippakam.com

இன்று இக்கிழக்கு ஜேர்மன் மக்களின் போராட்டமானது "நாம் ஒரே இன மக்கள் _ wir sind ein volk - என, ஜேர்மனியரின் தேசிய வாதத்தைப் பயன்படுத்தி, இணைவுக்கு ஆதரவாக திசைதிருப்பப்பட்டது. உடைபட்ட பேர்லின் மதிலினூடாக மேற்கு ஜேர்மன், மற்றும் அமெரிக்க ஐரோப்பிய பல்தேசியக் கம்பனிகள் மக்களின் தலைவிதியை நிர்ணயிக்க கிழக்கு ஜேர்மனிக்குள் நுழைந்து விட்டன.



## கிழக்கு ஜேர்மன் மக்களின் நிலை

"மூன்றாம் உலக" நாட்டிலிருந்து இங்குவரும் ஒருவருக்கு அளவில்லாமல் நிறைந்துகிடக்கும் ஆடம்பர மற்றும் உணவுப்பொருட்களைப் பார்க்கும்போது இதுதான் உலகம் என்று நினைக்கத் தோன்றும். காலம் செல்கையில் இங்கு நச்சுக்காற்றை சுவாசித்தபடி, இராசயனப் பொருட்களால் பதப்படுத்தப்பட்டு வருடக்கணக்கில் தகரத்திலிருக்கும் உணவுப்பொருட்களை தொடர்ந்து உண்ணும்போது முதலாளித்துவம் வளர்ச்சியடைந்த இந்த நாடுகளின் மகத்துவம் புரியும். இந்நிலைதான் கிழக்கு ஜேர்மன் மக்களுக்கு ஏற்பட்டது. மற்றும் கிழக்குஜேர்மனியில் உணவுப்பொருட்கள் (எல்லா உணவுப்பொருட்களும் கிடைத்தன என்பதல்ல), வீட்டுவாடகை என்பவற்றிற்கு அரசின் மானியமுறையால் _



படிப்பகம்

அவர்களின் வருமானத்தில் குறைந்தபங்கே செலவிடவேண்டியிருந்தது. ஆனால் மற்றைய அத்தியாவசிய ஆடம்பர பொருட்களுக்கு (குளிர்சாதனப்பெட்டி, துணி துவைக்கும் இயந்திரம், தொலைககாட்சி, வீடியோ, ஸ்ரியோ,...) பெருமளவு பணம் செலவளிக்கவேண்டியிருந்தது. அதனால் மேற்குஜேர்மன் நாணய விகிதத்திலேயே (டொச்மார்க் DM) தாமும் வருமானத்தைப் பெற்றால் வாடகை, உணவு போக மீதமுள்ள பணத்தில் T.V, குளிர்சாதனப்பெட்டி...என்பவை வாங்கலாம் என நம்பினார்கள். ஆனால் மேற்குஜேர்மனியிலுள்ளோர் தமது வருமானத்தில் (பெரும்பாகத்தை) 40-50% வீட்டுவாடகைக்கும் 30% வரை உணவுப்பொருட்களுக்கும் செலவிடவேண்டியிருப்பதை கிழக்கு ஜேர்மன் மக்கள் உணர்ந்திடவில்லை. எனவே இணையடுத்து இவ்விரண்டிலும் ஏற்படப்போகும் பெரும் விலையேற்றங்களை அறிந்திட அவர்களுக்கு வாய்ப்பிருக்கவில்லை.

## தொடர்பு சாதனங்கள்

கடந்த ஆண்டு இறுதியிலிருந்து மேற்குஜேர்மன் அரசியல்வாதிகளும், அவர்களின் கிழக்குஜேர்மன் பிரதிநிதிகளும், தொடர்புச்சாதனங்களும் கிழக்கு-மேற்கு ஜேர்மன் இணைவுக்கு ஆதரவான பிரச்சாரத்தை ஆரம்பித்துவிட்டனர்.

- ஜேர்மனிய மக்கள், குறிப்பாக கிழக்கு ஜேர்மன் மக்கள் இவ்விணைவை மிகவும் விரைவாக எதிர்பார்க்கின்றனர்.
- ஜேர்மன் இணைவு ஏற்படாவிடின் கிழக்குஜேர்மன் மக்கள் இங்கு (மேற்குஜேர்மனிக்குள்) வந்துவிடுவார்கள்.
- கிழக்குஜேர்மனியின் பொருளாதாரம் மிகவும் நெருக்கடி நிலையிலிருந்தது.
- இப்போது கிழ.ஜேர்மனியில் தோன்றியுள்ள வேலையில்லாத


www.padippakam.com

திண்டாட்டம், அங்கு முன்பு சோசலிச பொருளாதாரம் இருந்ததால் வந்த விளைவு.

என்பவை முக்கியமாக அவர்களின் பொய்ப்பிரசாரத்திலடங்கும். இனி அவற்றின் வெற்றியினைப் பார்ப்போம்.

1989 டிசம்பரில் கிழக்கு ஜேர்மனியிலும் எடுக்கப்பட்ட கருத்துக்கணிப்பீடுகள், ஆரம்பகாலத்தில் அவர்கள் கிழக்கு_மேற்கு ஜேர்மனி உடனடியாக இணைவதை விரும்பவில்லை என்று காட்டியிருந்தன.

இணைவதா தனித்திருப்பதா?
(DDR-கிழக்கு ஜேர்மனியில் கருத்துக் கணிப்பீடு)




உ+ம்( Der Spiegel, Nr.51, 18. Dec.1989)

தொடர்ந்து பிரச்சாரங்கள் அதிகரிக்கின்றன. மேற்கு ஜேர்மனியிலுள்ள பொருளாதார அமைப்புமுறையான *Soziale-Marktwirtschaft* பற்றி பெரும் பிரச்சாரங்கள் நடாத்தப்பட்டன. S.M.W என்பது வேலையில்லாதவர்களுக்கு சிறு உதவிப்பணம் வழங்கி அவர்களின் போராட்டத்தை அமைதிப்படுத்தும் தந்திரம் கூடிய, முதலாளித்துவ சந்தைமுறையாகும். அத்துடன் இவ்விணைவுக்கு ஆதரவான கருத்துக்கள் மக்கள் அதிகம் விரும்பிப்பார்க்கும் நேரமான 7/8மணிக்கு தொலைக்கட்சியில் ஒளிபரப்பப்பட்டன. வானொலியைத் திறந்தாலும் இந்நிலைதான். இவ்விளைவுக்கு எதிரான கருத்துக்களில், கிழக்கு ஜேர்மன் பழைய S.E.D கட்சியினரின் கருத்துக்களே காட்டப்பட்டன. இதன்மூலம் கிழ_மேற்கு இணைவா அல்லது 'கொம்யூனிஸ்டுகளின் சர்வதிகார ஆட்சி' அங்கு தொடர்வதா என்ற நிலையை ஏற்படுத்தினர்.

...52ம் பக்கம் பார்க்க



படிப்பகம்

நீங்கள் கேட்டவை






www.padippakam.com

# புதுமையார் பதில்

கே: ஈழ விடுதலைபோராட்டத்தில் புத்திசாலித்தனமானவர் யார் ?

ரஜி – மட்ராஸ்.

ப:தஞ்சைப்பெரிய கோயில் சாமி.

கே: ஜேர்மன் அரசால் இயற்றப்பட்ட புதிய வெளிநாட்டவர் சட்டம் பற்றி என்ன நினைக்கிறீர்கள் ?

குமுதினி – முன்ஸ்ரர்

ப: சட்டத்தின் முன் அனைவரும் சமம்.( வெளிநாட்டவரைத் தவிர )

கே: ஜேர்மன் தமிழர் அரசியலில் ஈடுபடுகிறார்களா ?

காய்திரி – யாழ்ப்பாணம்

ப: மன்னிக்கவும். பதில் சொல்ல நேரமில்லை, Part-time வேலைக்குப் போக வேண்டும், வரயேக்கே இரண்டு வீடியோப் படம் எடுத்து வரவேண்டும்.

கே: பிரேமதாசாவை ஒரு சமாதானப்பிரியன் என்று "அவர்கள்" அன்று கூறினார்களே, இப்போ எப்படி ?

தீபன் – கொழும்பு

ப: யாரங்கே, இவருக்கு ஒரு "பொட்டு" போடுங்கள்.

கே: கலை பிரசாரமாகாது, பிரசாரம் கலையாகாது என்கிறாரே நித்தி.

சிறி – நூரன்பேர்க்

ப: ஆனால் புரட்சிக்கு வித்திடும் கலைப்படைப்புக்கள் கூடாது



படிப்பகம்

என அவர் சொல்லவில்லையே, அத்துடன் கலை மூலம் புரட்சியை வளர்க்க முடியாது. ஆனால் கலை மூலம் அதற்கான மனதைப் பண்படுத்த முடியும்.

கே: எல்லா இயக்கங்களும் "மக்கள் எம்பக்கம்" என்கிறார்களே. அது எப்படி?
தயாநிதி – டென்மார்க்
ப: சற்றுக் கூர்ந்து கவனியுங்கள், அவர்களின் முதுகில் ஏதோ தொங்குகிறது அல்லவா ?

கே: அமெரிக்கா தனது படைகளை கொலம்பியா போன்ற நாடுகளுக்கு அனுப்பி "போதைவஸ்து" தயாரித்தலை முறியடிப்பது பற்றி,
ரவி – சிண்டில்பிங்கன்
ப: யானைவரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே.

கே: ஜனநாயகம் எங்கு உள்ளது.
ப: வீதியில்.

கே: கொம்யூனிச புரட்சியாளர்கள் விடும் பிழை என்ன?
ப: அவசரப்பட்டவர்கள் ஆயுதத்தை தூக்கிப்பிடித்தலும் அங்கலாய்த்தவர்கள் *கிரம்ஷியை* தூக்கிப் பிடித்தலுமாகும்.

கே: ஈரோஸ் இயக்கம் மற்றைய இயக்கங்களை விட தப்பிக் கொண்டதற்குக் காரணம் என்ன ?
ப: கீழ் வருவனவற்றில் சரியானவற்றைத் தெரிவு செய்யவும்:
0 சந்தர்ப்பவாதம்
0 வீணாக வாய்திறந்து துப்பாக்கிக் குழலுக்கு இரையாக விரும்பாமை.
0 புத்திசாலித்தனம்.
0 முதுகெலும்பில்லாமை.

www.padippakam.com

கே: "மக்கள் தான் புலிகள், புலிகள்தான் மக்கள்" என்பது சரியா ?

ப: இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில் அது சரி போல்தான் தோன்றுகிறது.

கே: தூண்டில் சிவத்தின் கவிதைகள் எப்படிப்பட்டவை ?

ப: உடலின் உப்புக் கைப்பவை.

கே: உங்கள் சிறு பத்திரிகையால் என்ன செய்ய முடியும் ?

ப: இக் கேள்விக்கு பாரதியாரை பதில் சொல்ல விடுவோம்.

"அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் – அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்
வெந்து தணிந்தது காடு – தழல்
வீரத்தில் குஞ்சென்று மூப்பென்று முண்டோ?

கே: ஈழத்தமிழர் விரும்பிக் கேட்கும் பாடல் என்ன ?

ப: எங்கே நிம்மதி, எங்கே நிம்மதி அங்கே எமக்கோர் இடம் வேண்டும்,
எங்கே <u>அவர்கள்</u> யாருமில்லையோ அங்கே எமக்கோர் இடம் வேண்டும்.

கே: தமிழ் கவிதைகளுக்கு என்ன நேர்ந்து விட்டது ?

ப: தமிழ் சினிமாவுக்கு நேர்ந்த கதிதான்.

கே: பெண்னிலைவாதம் ஆண்களுக்கு எதிரானதா ?

ப: இல்லை, அது அவர்களின் விடுதலைக்கும் அவசியமானது.

கே: என்ன உங்கள் "சோசலிசத்தை" புதைத்து விட்டார்களாமே ?
தேவி. Madras.

ப: வடிவாகத் திறந்து பாருங்கள்; சடலம் முகமூடி அணிந்திருப்பது தெரியவரும்.



படிப்பகம்

கே: சோவியத் தலைவர் கொபர்ச்சோவில் உமக்குப் பிடிக்காதது என்ன?


ப: உலக அரசியலில் பாரிய மாற்றம் கொண்டுவரக் கூடிய இரு ஜேர்மனிகளின் இணைவுக்கு O.K சொல்லும் இவரால் சோவியத் அமைப்பிலிருந்து சிறிய நாடுகள் பிரிவதை எதிர்ப்பது. மற்றும் பொருளாதாரக் கொள்கை.

கே: தமிழ் சினிமாவைத் திட்டித் திட்டி எனது நண்பர் திரும்பவும் தமிழ் சினிமாவையே பார்ப்பதன் காரணமென்ன ?

ப:வாழ்க்கை முழுக்க திரை போட்ட ( போடப்பட்ட ) எமக்கு திரைப்படங்களே வாழ்வாய் போயிற்று.

*கே:_ ஜேர்மனியில் தமிழர் எப்படி வாழ்கிறார்கள்?*

*ப:_ பெருக்கிறது உடல் சிறுக்கிறது மனம்*
*பெருக்கும் உடலிலிருந்து சிறுக்கும் மனம்*
*ஓடிவிட, அந்நியப்பட்டு நுகர்வோர் கும்பலில்*
நாங்கள்





படிப்பகம்

www.padippakam.com

# தீர்ப்புத் தினத்தன்று [1]

(Sipho Sepamla ஸிபோ ஸெம்பம்லா; தமிழில்: மணி)

கறுப்பு மனிதர்கள் பிறவிப் பாடகர்கள்
கறுப்பு மனிதர்கள் பிறவி ஓட்டக்காரர்கள்
கறுப்பு மனிதர்கள் சமாதானப் பிரியர்கள்
நம்மை முட்டாள்களாக்கும் கட்டுக்கதைகள்

ஷம்பேன் [2] குமிழ்களுடன் நாம் உறிஞ்சப்பட்டுள்ளோம்
மூச்சடைக்கும் தூசியை நாம் அறிந்துள்ளோம்
அவமானத்தின் வேதனையால் நாம் துடிதுடித்துள்ளோம்

பாடகர்கள்
ஓட்டக்காரர்கள்
சமாதானப்பிரியர்கள்

நம்முட் சீறும் புயலை எவரும் கண்டதில்லை
நம் அடி நிலையை நாம் தொட்டுவிட்டோமென அறிய எவர்க்கும் அக்கறையில்லை

சிரிப்பது வேதனையிற் குமுறுவது என்றாயிற்று

பாடகர்கள்
ஓட்டக்காரர்கள்
சமாதானப்பிரியர்கள்

மண்ணாங்கட்டி

இரவுப் பிரார்த்தனைகளில் [3] நாமெல்லாரும் பாடுவோமென்றே அஞ்சுகிறேன்



படிப்பகம்

www.padippakam.com

எனக்குத் தெரிய நாமெல்லாரும் நம் பாதுகாப்புக்காகவே ஓடுவோம்
எந்தச் சமாதானம் இன்னமும் விரும்பப்படுமென்று தான் எனக்குத்தெரியவில்லை

1 Judgement day- கிறிஸ்தவர்களது நம்பிக்கையில் மனிதஇனத்தின் முடிவில் மனிதர்களது மோட்ச- நரகங்கள் தீர்மாணிக்கப்படும் நாள்.
2 Champagne- வெற்றியைக் கொண்டாட அருந்தப்படும் மது.
3Night visit_ துக்கமான நிகழ்வுகளையொட்டி இரவிரவாக நிகழும் பிரார்த்தனை.

---

## — கண்டதும் கேட்டதும் —

அமெரிக்காவில் எங்கள் வீட்டுக்கு எதிர் வீடு காலியான போது அதில் கறுப்புக் குடும்பம் குடியேறியது...... அந்தக் கறுப்புக் குடும்பத்தைத் தங்களுள் ஒருவராக சர்வசகஜமாக ஏற்றுக் கொண்டார்கள் அங்கிருந்த எல்லோரும்.
_ எம்.எல். உதயமூர்த்தி குமுதத்தில் _

தனது மறைமுகமான நிறவாதத்தை *கௌரமாகவும்* சாந்த மனப்பாவத்துடன் காட்டிக் கொண்டுள்ளார் இந்த தத்துவஞானி.



படிப்பகம்



# ஊழித்தனம்

**சிறுகதை - சத்தியன்**

அசையாத சிலை. உயிர்ப்புள்ளதா? இல்லையா? மரமேறும் நாகன் முடக்கி உட்கார்ந்து நாடியில் கைவைத்தபடி யோசித்துக் கொண்டிருந்தான். பின்புறம் வீடு. பின்னேரம். சூரியன் உறுமும் துப்பாக்கிக்கும் பறக்கும் ஷெல் துண்டுகளுக்கும் பயந்து வேகமாக மறைகின்றானா? என்ன செய்வது சுற்று வட்டார ஊர்களில், குறிச்சிகளில், எங்கும் நடுக்கம்.

உயிர்ப்பில்லாமல் ஒவ்வொரு மனிதனும் எழுந்து நடக்கும் பிணங்கள்.

மரணம். பீதி

மரணத்தைவிடக் கொடிய மரணத்திற்கான காத்திருப்பு.

நாகன் எழுந்தான். துண்டைத் தோளில் போட்டான். கொட்டிலுக்குள் பார்த்தவாறு

"பிள்ளை ஒருக்கா அம்மன் கோவிலடிபக்கம் போயிட்டு வாறன்"

"கவனம் அப்பு ஆமிக்காரங்கள் சேந்தான்குளம் வரை வந்து விட்டாங்களாம்"

"தெரியும் பிள்ளை பொம்பர் ஹெலி வந்தா தம்பியையும் கூட்டிக் கொண்டு பதுங்கு குழியுக்கை இரு"

நாகன் வயல் பரப்பை தாண்டி நடந்தான்.

வயலில் பயிர் பச்சையைக் காணவில்லை. தெருவுக்கு வந்தான்.

தாமோதரி வீட்டை எட்டிப் பார்த்தான்.

முற்றத்தில் சனப்புளக்கத்தைக் காணவில்லை.

கோயிலடியில் இளம் பொடியன் நாலைந்து பேர் இலுப்பம் மரத்தின் கீழ் சைக்கிள் பெடலை ஒரு கால் மிதிக்க மறுகால் நிலத்தை மிதித்தபடி நின்றார்கள்.

கன்னியாக நின்ற ஒருவன் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான். நாகன் காதைக் கூர்மையாக்கினான். "ஆமிக்காரர் பெரி அனியாயம் செய்யிறான்கள் காம்பை விட்டு வெளிக்கிட்டு வந்து, கண்ணிவெடியை அகற்றியபடி புல்டோசரால் வீட்டை உடைத்துக் கொண்டு மூவ் பண்ணுறான்கள்"

ஒவ்வொருவர் முகங்களிலும் திகில்.

உயிர்ப்பின் ஜீவதளம் மேல் இராட்சத சக்தியலால் இறுக்கியது போல. உறைந்து வெறித்தபடி ஒவ்வொருவரும் கலைய முற்பட்டனர்.

"பெண் புரககளை கண்டபடி கொடுமை படுத்திறாங்களாம் பெடியங்களைக்கண்டால் சுடுறாங்களாம்"

"இல்லையடா வாளாலையும் வெட்டுறாங்களாம் கீறிக் கிழிக்கிறாங்களாம்"

"டேய் சுட்டாலும் பரவாயில்லை ஒரே சாவு வெட்டினா"

ஈரல்குலை நடுங்கியது

நாகன் தொடர்ந்து நடந்தான்

சந்தையில் கூட்டம் நிற்கும். ஏதாவது புதிய புதினங்கள் கிடைக்கும். வானில் பம்பர்கள். சூரிய ஒளிபட்டு வெள்ளித்தட்டாய் மின்ன கண்கள் கூசின.

www.padippakam.com

பயம் ஒவ்வொருவர் மனதிலும் தொற்றியது.

நாகன் அண்ணாந்து பார்த்தான்.

உடம்பு குலப்பன் எடுத்தது. மனம் உதறியது. குறண்டி இழுக்கும் கோழியாட்டம் நாகனின் தலையாடியது. கண் கூசியது.

எப்படித் தப்பிறது குண்டு விழுந்தா தொலைஞ்சேன்.

பெரிய புளிய மரம் முன்னுக்கு நின்றது.

கிழே போய் நிண்டா. எண்டாலும் பயம்.

மூலையில் இருக்கிற இராசம்மா வீட்டை போவோம்.

விறு விறுவென்று படலையை தள்ளியபடிஉள்ளுக்கை போனான்.

"என்ன நாகர் இந்த நேரத்திலை"

"இல்லையம்மா இஞ்சாலை ஒருக்கா புதினம் அறிவம் எண்டு வந்தனான் அம்பிட்டு போட்டன்"

"என்ன விசர் வேலை பார்த்தனி வா..வா பதுங்கு குழியுக்கை போவம்"

வீட்டு தாழ்வாரத்து கொஞ்சம் தள்ளி மாமரத்து கிழே வெட்டி மூடப்பட்டிருந்த பதுங்கு குழியுக்கை இருவரும் இறங்கினார்கள்.

இருட்டாக இருந்தது. மெழுகுவர்த்தி மெல்லியதாக ஒளிவிட்டது.

இரண்டு மூன்று தலை தெரிந்தது.

இராசம்மாவின் புருசனும். இரண்டு பெட்டையளும்.

"என்னம்மா நாகர் எங்கே வந்தவர்"

மூத்தமகள் ராணி விசாரித்தாள்.

"ஓமடி பெரியவள் இந்த நேரத்திலை... விசரன் மாதிரி..."

நாகனை எல்லோருக்கும் பழக்கம்.

இந்த வீட்டில் மட்டுமல்ல. ஊர்முழுக்கத்தான்.

குழந்தைநிண்டு குஞ்சு போக நாகர் என்று அழைப்பது வழக்கம்.

நாகர்றை கோடாலி படாமை எந்த விறகும் கொள்ளியாகாது.

ஒட்டுக்கு பக்கத்திலை நிற்கிற பனையை ஒட்டிலை துரும்பு கூட படாமை துண்டு போடுவான்.

தொழில் சுத்தம்.

"உவன் கணேசன் எங்கையடி போனவன்"

...மறு பக்கம் பார்க்க



படிப்பகம்

www.padippakam.com

எமது சமுதாயத்தில் அதிகமாக எம்மவரால் மூடநம்பிக்கையென ஒதுக்கப்படும் சில பழக்கவழக்கங்களும் விஞ்ஞானத்திற்கும் தொடர்பு இருப்பதுபோல் தெரிகிறது.

இப்பழக்கவழக்கங்கள் அதிகமாக சமயத்துடன், பேய், பிசாசுகள் என்ற கற்பனைப் படைப்புகளுடனும் தொடர்புப்படுத்தப்பட்டிருப்பதால் நிருபிப்பதுபோல் எங்கோ ஒரு நோயுற்ற அல்லது வயோதிபர் ஒருவர் இறக்கிறார். சில இடங்களில் மிருகங்களும் இறந்து கிடக்கின்றன. இவைகளைப் பேய் அடித்துவிட்டது என்கிறார்கள் எமது முதியவர்கள்.

உண்மையில் என்ன நடந்திருக்கலாம்? இன்றைய விஞ்ஞான உலகில் எமது உலகையும், சுற்றாடலையும் பற்றி புதிய தகவல்கள் வெளிவந்துள்ளன.

# மூடநம்பிக்கையா ? விஞ்ஞான விளக்கமா ?

இவைகள் எம்மில் பலரால் இலகுவாக மூடநம்பிக்கையென நிராகரிக்கபட்டுவருகிறது.

குறிப்பாக ஒரு நடுச்சாமத்தில் நாம் நித்திரையில் இருக்கும்போது திடீரென ஆந்தை அலறும் ஓசை கேட்கிறது. நாய் ஊளையிடுகிறது. மற்றும் பறவைகள் மற்றும் வீட்டுமிருகங்களும் பதற்றமடைந்து காணப்படுகின்றன. பெரியவர்கள் இது இயமன் வரும்போது மிருகங்கள் கண்டுவிட்டு போடும் சத்தம் என்கின்றனர். அதை குறிப்பாக இன்றைய விஞ்ஞான அறிவின்படி, எமது புலன்களுக்குதென்படாத பலவாயுக்களும், கதிர்களும் பூமியிலிருந்தும், உலகமண்டலத்திலிருந்தும் எம்மை தாக்குகின்றன. ஆனால் இக்கதிர்களையும், வாயுக்களையும் ஒருசில மிருகங்களினாலும், பறவைகளினாலும் உணரக்கூடியதாகவுள்ளது. குறிப்பாக மழை, புயல், நிலநடுக்கம் வரப்போவதை நாம் விஞ்ஞானக்



படிப்பகம்

கருவிகளின்மூலமாகத்தான் முன்கூட்டியே கண்டு அறியமுடிகிறது. ஆனால் இவற்றைப் பல இயற்கை பிராணிகள் தமக்கு உள்ள சக்திமூலம் அறிந்துகொள்கின்றன. குறிப்பாக வெள்ளம்வரப்போகிறது என்பதை பல மணித்தியாலங்களுக்கு முன்கூட்டியே அறிந்து கொண்ட எறும்புகள் தம்மையும், தமது சந்ததியையும் பாதுகாப்பதற்காக வேறு இடத்திற்கு இடம்பெயருகின்றன. மற்றும் பூமிநடுக்கம் இடம் பெறுவதற்கு பல மணித்தியாலங்களுக்கு முன்பே மிருகங்களால் உணரப்பட்டு, அவை பதற்றமடைந்து அங்கும் இங்கும் ஒடித்திரிவதை காணலாம்.

இனி எமது ஆரம்ப பிரச்சனைக்கு வருவோம்.

ஆந்தை கத்த, நாய் ஊளையிட, வயோதிபர், நோயாளிகள் இறப்பதற்கும் என்ன காரணம் இருக்கலாம் என ஆராய்வோம். ஒருவரின் மரணத்திற்கு மேற்கூறிய கதிர்கள், நச்சவாயுக்கள் காரணமாகவிருக்கும் பட்சத்தில், மேற்கூறிய நிகழ்வுகள் நடைபெறுகின்றன என நாம் முடிவுக்கு வரலாம்.

இந்த உண்மையை அறிந்திருந்த முதாதையர் எம்மைத் தீய வாயுக்களிலிருந்தும் காப்பாற்றுவதற்காக, இதை விரிவாக எடுத்துக் கூறமுடியாத நிலையில், பேய் இயமன் என பெயர்ச்சூட்டி விளக்கப்படுத்தியிருக்கலாம் அல்லவா.

மேற்படி குறிப்பிட்ட "மூடநம்பிக்கை" போல பல பழக்கவழக்கங்கள் விஞ்ஞானத்தொடர்பு உடையனவதாக காணப்படுகின்றன.

இதுபற்றி உங்கள் விளக்கங்களையும், கேள்விகளையும் வாசகர்களிடமிருந்தும், விமர்சகர்களிடமிருந்தும் எதிர்பார்க்கின்றோம்.

-வாணி-

www.padippakam.com

# 8வது இலக்கியச் சந்திப்பு

## சில குறிப்புக்கள் - ஸ்பாட்டக்கஸ்

இச் சந்திப்பின் போது பல கடினமான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

"உலகியல் ஒப்பு நோக்கில் எமது சமகால வளர்ச்சி" என்ற தலையங்கங்களின் கீழ் சிந்தனை பரா, வெகுஜனம் அலெக்ஸ் ஆகியோர் பேசினார்கள். நீண்ட ஆழமான கட்டுரைகள்.

இலங்கையின் பொருளாதார குறைவளர்ச்சிக்கான உள்நாட்டு, வெளிநாட்டுக் காரணிகள் எடுத்துக் கூறப்பட்டன. இது பற்றிய கட்டுரைகள் இலகுவான ஆழமான முறையில் தொடர்ந்தும் வாசித்தல் முக்கியமானது. பின் வெகுஜன ஆசிரியர் வேலாயுதத்தால் "மலையக மக்களும் நாமும்" என்ற கட்டுரை வாசிக்கப்பட்டது.

பல பழைய பல்லவியுடன் ஆரம்பித்த இக் கட்டுரையுடன் பல பழைய பல்லவியுடன் விவாதமும் தொடர்ந்தது.

மேற்கத்திய இடதுசாரிகள் சிலர் மூன்றாம் உலக நாட்டு மக்களை ஒரு வித "பாவங்கள்", "உதவப்பட வேண்டியவர்கள்" என்ற ஒரு பார்வை இக் கட்டுரையிலும் தென்பட்டது. இந் நோயை எமது இடதுசாரிகள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அத்துடன் மலையகத் தமிழர்கள் மீது அதீத "பாசம்" கொண்டவர்களாகப் பேசுபவர்களிடம் மலையகமக்களை கைகால் ஆகாதவர்கள் போல் பார்ப்பதை காணக்கூடியதாக இருந்தது. இது தவிர்க்கப்பட வேண்டும்.

பின் ஏலையா ஆசிரியர் முருகதாஸ் ஜேர்மனியில் வெளிவந்த கவிதைகளை விமர்சித்தார். அவர் செய்தசாதனை என்னவெனில் அனைத்துக் கவிதைகளையும் வலுக்கட்டாயமாக தனது விமர்சனத்துக்குள் அடக்கியிருந்தமையே ஆகும். விமர்சனத்துறையில் இவர் பலவற்றை அறிந்து கொள்ள வேண்டும்.

பின் சுசீந்திரன் காங்கேசன் கோவிந்த குமாரின் கவிதைகளை விமர்சித்தார். இவர் முதலில் ஒரு சிறு பேச்சுடன் தனது கவிதை விமர்சனத்தை தொடர்ந்தார் கவிதைகளை சுக்கு, சுக்காக கழட்டி



படிப்பகம்

www.padippakam.com

விமர்சித்தமை மிகவும் நன்றாக இருந்தது. மேற்கு ஜேர்மனிக்கு ஒரு இலக்கிய விமர்சகர் தேவை என்ற முறையில் இவர் மீது நம்பிக்கை வைக்கலாம். ஆனால் கவிஞர்களின் கற்பனையை குத்தகைக்கு எடுத்துக் கொள்வதையும், ஒரு வித "மேதாவிப்போக்கை" கடைப்பிடிப்பதையும் தவிர்த்துக் கொண்டால் ஒரு தரமான விமர்சகர் நம்மிடம் இருப்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடையலாம்.

# இலங்கையர் சங்கம்.

ஜேர்மனியில் வாழும் தமிழ் சிங்கள முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து இலங்கையர் சங்கம் என்ற பெயரில் ஒரு அமைப்பை உருவாக்கியுள்ளனர். இவ்வமைப்பின் முக்கிய நோக்கம் இனங்களிடையே நட்புறவை வளர்த்தல், இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்களுக்கெதிராகக் குரல்கொடுத்தல் போன்றவற்றை முக்கியமாகக் கொண்டுள்ளது. கடந்த காலங்களில் இவ்வமைப்பானது எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், உண்ணாவிரதங்களை நடாத்தியுள்ளது.

---

— கண்டதும் கேட்டதும் —

சிரிக்கத் தெரியாதவன் ஒரு இயங்கியல் வாதியாக இருக்க முடியாது.

— B.Brecht —

பிரிட்டிஷ் காலனி ஆட்சிக்காலத்தில் குதிரைகளுக்கெனக் கட்டிய லயன்களிலேயே இலங்கை தேசிய வருமானத்தில் அறுபத்தைந்து சதவீதத்தை ஈட்டிக் கொடுக்கும் இந்த மலையகத் தொழிலாளர்கள் இன்னும் வாழ்ந்து வருகிறார்கள்.

# முகடுகள் நோக்கி அகதியின் குரல்

மலையின் முகடுகளில்
கண்ணீர் துளிர்க்கும்
தேயிலைச் செடிகள் பிரிவுக்குபுலம்பும்
கவ்வாத்து வெட்டிக்காய்ந்த
சள்ளித்தடிகள் பனியில் குளிக்கும்
தீயும்
லயங்களில் குப்பிவிளக்கில்
மங்கிய ஒளியில்
நெஞ்சைத்திரியவிட்டு
நாளைய வாழ்வு எங்கே?
நினைவுக்குள் இடறுவாய்



நானும் உன் போல்தான்
நிழலின் வேம்பை, வயலின் வரப்பை
தாயின் முலையை, மனத்தின் மல்லிகையை
பிரிந்த...
அகதி மகன்
பெயர்கள் வித்தியாசம்
பெயர்களில் என்ன தேனாவடிகின்றது ?

அந்த நாளில்
வெள்ளையன் கைத்தடியாய்
விரும்பியமிடமெங்கும் நட்டுவைத்தான்

இன்று
சிதறிய மாபின்முடிச்சாய்
உலகெங்கும் தொலைந்து போனோம்...

நாமோ
இரத்தை விற்று
சுவர்க்கம் சிருஷ்டிக்க எண்ணி
தோற்று...
நம்பிக்கை தேடும்.......

-ச. தில்லைநடேசன்-

# வாசகர் கடிதங்கள்

புதுமையின் கருத்துக்களுடன் எனக்கு முரண்பாடுகள் உள்ளன. ஆயினும் விவாதத்திற்குரிய அவகாசம் இல்லை. மாக்சியக்கட்சிகள் மீதும், 'சில' மார்க்சியவாதிகள் மீதும் தொடுக்கப்பட்டுள்ள தாக்குதல்கள் சமநிலையான விமர்சனமாக அமையவில்லை. "வைதீக மார்க்ஸிஸ்ட்", "முழுமையானதும் நிலையானதும் பிழையானது" போன்ற சொற்றொடர்களே மற்றவர்கள் மீது அள்ளிவீசப்படும் வேற்றுப் பதங்களாகிவிட முடியாதா?

தவறான மார்க்ஸிஸ்ட்டுகள் யார் என்று குறிப்பாக சொல்லாவிட்டாலும் சென்னை ரோசா லக்சம்பேர்க் படிப்புவட்டம் போன்ற "நவ மார்க்ஸிய மடங்களின்" அதிபதிகள் கிட்டத்தட்ட எல்லா கம்யூனிஸ்ட் கட்சிகள் மீதும் வறட்டுத்தனம், ஸ்தாலினிஸம் போன்ற லேபிள்களை ஒட்டிவிட்டு ஒதுங்கிநின்று ஞானோபதேசம் செய்கிறார்கள். நவ மார்க்ஸியம் என்பது ஒரு நாகரீகமான சிவப்புக்குள்ளாகிவிட்டது. 'முழு உண்மைகளையும் அறிந்தது போல கூவித்திரிகிறார்கள்' – என்றவாறான குற்றச்சாட்டுகளையும் லேசாகவே சமத்திவிட்டு அதே குற்றத்தை குற்றம் சமத்துபவரும் செய்யமுடியாதா?

சந்தர்ப்பவாத நோக்கில் குறுகிய தேசிய வாதத்தையும், பேரின வாதத்தையும் நோக்கி 'இடதுசார்புச்' சிந்தனையை பிரகடனம் செய்த புத்திஜீவிகள் திரும்பிய போதும், நிதானமாக நியாயமாக ஒரு பாட்டாளிவர்க்க நிலைப்பாட்டை எடுத்த கட்சிகளும் அவற்றின் ஊழியர்களும் உறுப்பினர்களும் அன்று சொன்னவை இன்று நிசமாகிவர காண்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சிகள் தவறுகள் செய்யாமல் இருக்கவேண்டுமாயின் அவை செயலற்றதாகவே இருக்கவேண்டும். அவற்றைத் திருத்தி முன்னோக்கிச் செல்லும் முயற்சிகளைக் கூட இழிவுபடுத்தும் சாய்வுநாற்காலிக்காரர்களை நாம் அடையாளம் காண்பது நல்லது.

மறுபுறம் SVR, யேசுராசா போன்றவர்கள் கட்டவிழ்த்து விடும் பிரச்சாரங்களின் தொனியுடன் உடன்பாடான கோசங்கள் புதுமையில் காணப்படும்போது இத்தகையரின் அணியில் புதுமை நிற்கிறதென்றே கருத நேரிடலாம்.

லண்டன் — சிவா —

புதுமையில்.5 இல் வாணியின் 'மறுக்கப்பட்டவர்கள், மறக்கப்பட்டவர்கள்'என்னை மிகவும் கவர்ந்தது.

6748, பாட்பேர்க்சாபன் — பா.பிரபா —

முகமறியாத 'புதுமை' வெளியீட்டாளர்களுக்கு 'தாயகத்தில்'உங்கள் இதழ் பற்றிய அறிமுகம் கண்டேன். இலக்கியத்தை நேசிப்பவர்கள் _ உலகின்

www.padippakam.com

எப்பாகத்திலிருந்தாலும் அவர்கள் சும்மா இருக்கமாட்டார்கள். இலக்கியத்தைப்பற்றி கதைக்கவோ விவாதிக்கவோ இயலுமானால் இரு சஞ்சிகைகளை வெளியிடவும் முன்வருவார்கள்.

தாயகத்தில் 'அறிமுகம்' பகுதியில் எஸ்.பி.தாசன் கூறுவதாகச் சொல்லும் கருத்துக்கள் தெளிவில்லாமல் இருக்கின்றன. சஞ்சிகையை வாசித்த பின் அது பற்றி எழுதுகிறேன்.

ஒன்டாறியோ,
கனடா. —ஆர்.என்.லோகேந்திரலிங்கம்.—

அன்புடன் புதுமை ஆசிரியர் குழுவிற்கு,
இதழ்—5 கிடைத்தது. தரமாகவும் சிறப்பாகவும் இருந்தது. புதுமை இரண்டு மாதத்திற்கு ஒரு தடவையோ அல்லது மாதம் ஒருமுறையோ வெளியிட்டால் என்ன? மூன்று மாதத்திற்கு ஒருமுறை என்பது நீண்டகாலமாக உள்ளது. உலகம் முழுவதும் விரைவான மாற்றங்கள் ஏற்பட்டுவரும் சூழலில்— இது பற்றிய நிலைப்பாடுகளை விரைவில் அறிந்துகொள்ளமுடியும்.

நிக்கரகுவா பற்றிய கட்டுரையில் "மத்திய அமெரிக்கா சமாதானத் திட்டம்" மூலம் நிக்கரகுவாவில் தேர்தலை வைக்க அமெரிக்கா திட்டம் தீட்டியதாக எழுதியுள்ளீர்கள். ஆனால் "மத்திய அமெரிக்கா சமாதான திட்டத்தை" அமெரிக்கா எதிர்த்து வந்தது. இதற்குப் பதிலாக தன்னுடைய திட்டத்தை முன்வைத்து ஏற்கும்படி கூறியது. எனவே அமெரிக்காவின் நிலைப்பாடு பற்றி உங்கள் கருத்து தவறானதெனக் கருதுகிறேன். — டி.செல்வராஜன்.—

சுவிட்சிலாந்து



படிப்பகம்

சீதனப் பேய்க்கெதிரான ஆண்களின் மனமாற்றத்திற்கு உங்கள் புதுமை மூலம் முயற்சி செய்யுங்கள்.

பிராங்பேர்ட் - பட்டு-

புதுமையில் வெளிவந்த எல்.பி.தாசனின் கட்டுரை நன்றாக இருந்தது. ஏனைய ஆக்கங்களும் நன்றாகவிருந்தன. மற்றவர்களை கேலிசெய்வதைத் தவிர்த்து உங்கள் கருத்துக்களை துணிந்து சொல்வது நல்லது.

சென்னை. 41 - என்.ராதா -

புதுமையில் இலங்கை தொடர்பான ஆக்கங்கள் குறைவாக உள்ளன. தனிப்பட்ட முறையில் ஆட்களைத் தாக்குவதை தவிர்த்துக் கொள்ளவும்.

இலங்கை - ஜெயா -

சுசீந்திரனின் ஜேர்மனியில் புதிய வெளிநாட்டவர் சட்டம் பற்றிய கட்டுரை பல தகவல்களைக் கொண்டிருந்தது. அண்மையில் வெளியான புதிய சட்டங்கள் பற்றி விபரமாக தந்தால் நல்லது.

பிராங்பேர்ட் -எல்.பாலன்.-

---

## – கண்டதும் கேட்டதும் –

" உலகத் தொழிலாளர்களே என்னை மன்னியுங்கள்" என்று தோழர் கார்ல் மார்க்ஸ் கூறுவதாக பயான் மாநிலத்தில் பிற்போக்கு வாதக்கட்சியான CSU வால் தெருவெங்கும் ஒரு போஸ்டர் ஒட்டப்பட்டிருந்தது. இதில் பகிடி என்னவென்றால் சமுதாயத்தில் வர்க்கப்பிரிவு உள்ளதை மறுத்து வந்த இக் கட்சி மேற்படி வாசக மூலம் அவர்களையறியாமலே வார்க்கப்பிரிவை ஒத்துக் கொண்டமையே.

www.padippakam.com




# லைபீரியாவில் மோதல்.

KRAHN, MANDINGO, GIO, MANO, KRU, என பல்வேறு சிறு இனங்களைக் கொண்ட இந்நாட்டில் கடந்த 8 மாதங்களாக நீடித்து வரும் சண்டை தற்போது உக்கிரமடைந்து பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட உயிர்களைக் குடித்துள்ளது.

15ம் நூற்றாண்டிலிருந்து ஆபிரிக்கா ஐரோப்பியரால் சூறையாடப்பட்டபோது, சதுப்புநிலத்துடன் கூடிய கரையோரப் பகுதியாகவிருந்த இந்த நாடு (இன்று லைபீரியா) அன்றைய காலணித்துவ நாடுகளின் அடிமைப்படுத்தலிலிருந்து தப்பித்தது.

ஆனால் 19ம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் ஆபிரிக்காவில் இருந்து அமெரிக்காவுக்கு அடிமைகளாகக் கொண்டுசெல்லப்பட்ட மக்களை, அங்கு வேலை இல்லாமை காரணமாக அவர்களைக் கப்பலில் கொண்டுவந்து அந்த நாட்டில் வாழ்ந்த மக்களை கலைத்துவிட்டு "ஆபிரிக்க-அமெரிக்கன்" இங்கு கூடியேற்றப்பட்டனர். அன்றைய (1822) அமெரிக்க ஜனாதிபதியாயிருந்த Monroe வைக் கௌரவிக்கும் முகமாக Monrovia என்ற நகரம் அமைக்கப்பட்டது. அன்றிலிருந்து ஆபிரிக்க-அமெரிக்கரின் பகுதியையும், மற்றைய இனங்களின் பகுதியையும் ஒன்றாக இணைத்து Commen Welth of Liberia என்ற கூட்டில் அமெரிக்காவின் அதிகாரத்திற்கு உட்பட்டிருந்தது. பின் 1847ல் அது குடியரசாக மாறியது. ஆபிரிக்க அமெரிக்கன் தமது ஆதிக்கத்தை பலப்படுத்த



படிப்பகம்

www.padippakam.com

மற்றைய பூர்விக இனங்களை அடக்கத் தொடங்கினர். பூர்விக இனங்கள் எதிர்க்கத் தொடங்கினர். காலாதி காலமாக நடந்த இச்சண்டை 1980ல் KRU இனத்தைச் சேர்ந்த SAMUEL DOE இராணுவ சதிமூலம் வெற்றி பெற்றதும் 133 வருடங்களாக இருந்த அந்நிய ஆட்சி நிறுத்தப்பட்டது(?)

அத்துடன் 133 வருடமாக நடந்துவந்த அந்நிய ஆட்சியும் அகற்றப்பட்டது. ஆனால் இவன் ஆட்சிக்கு வந்ததும் மற்றும் ஒரு பூர்விக இனமான KRAHN இனத்தை மிக மோசமாக அடக்கினான். இவன் அந்நிய ஆட்சியை அகற்றியிருந்ததாக கூறப்பட்டபோதும் அந்நியரின் உதவியுடனேயே ஆட்சி நடத்தினான். அமெரிக்க கப்பல் கொம்பனிகள் மலிவான கூலி, வரி காரணமாக இந்நாட்டுக் கொடியில் பறந்தன. எனவே உலகில் அதிக கப்பல்களைக் கொண்டதாக இதுமாறியது.மற்றும் அனைத்து மூலதனங்களையும் பிறநாட்டுக் கொம்பனிகளே நிர்வாகித்தும் வருகின்றன.

இதற்கெதிராக DOE வின் ஆதரவாளராக இருந்த Charles Taylor என்பவர் National Patriotic Front (NPF) என்ற பல்வேறு இனங்களின் கூட்டுடன் Doe வின் அரசிற்கு எதிராக போராடி வருகிறான். இவருடன் சேர்ந்து போரிட்ட Prince Johnson என்பவர் இனவாதம் காரணமாக விலக்கப்பட்டதாகத் தெரிகிறது. மற்றும் போராட்டக் கூட்டாளியான NPF லைபீரியக் குடியரசை ஒரு புதிய அத்திவாரத்தில் கட்டியெழுப்ப முயல்வதாகக் கூறப்படுகிறது.

– வாணி –

---

## — கண்டதும் கேட்டதும் —

பழைய சோசலிச நாடுகளும் இப்போ மூன்றாம் உலகை சுரண்ட தயாராகிக் கொண்டிருக்கின்றன.

– பிடல் கஸ்ரோ. கியூபா அதிபர். –


படிப்பகம்

உ+மாக கிழக்கு ஜேர்மன் மக்களின் ஊர்வலங்கள் பெரிதாகக் காட்டப்பட்ட அதேவேளை இணைவை எதிர்த்து பிராங்போர்ட்டில் („Nie wieder Deutshland") நடாத்தப்பட்ட ஊர்வலத்தில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டபோதிலும், 7 ஆயிரம் பேரே கலந்துகொண்டதாக T.V, பத்திரிகைகளில் சொல்லப்பட்டன. அத்துடன் ஊர்வலத்தில் குவிக்கப்பட்டிருந்த பெருமளவு பொலிசார் கலந்துகொண்டவர்களின் ஆத்திரத்தை தூண்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். ஊர்வலம் முடிவடைந்த இடத்தில் பொலிசாரால் ஊர்வலக்காரர் மீது கண்ணெரிவதற்கான இராசயனம் கலக்கப்பட்ட தண்ணீர் வீசியடிக்கப்பட்டது. அன்று மக்கள் சிதறி ஓடியிருந்தால் உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருக்கும். பின்னர் இதை பயங்கர நிகழ்ச்சியாகக் காட்டி, பொலிசாரை ஆபத்பாண்டவராக்கின தொடர்புச்சாதனங்கள். பத்திரிகைகளைப் பொறுத்தவரையில் இங்கு அதிகம் விற்பனையாகும் Bild

## —கண்டதும் கேட்டதும்—

கிழக்கு ஐரோப்பாவிலும், சோவியத் யூனியனின் சில பகுதிகளிலும், மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின் ஆகியோரின் சிலைகள் மக்களால் அகற்றப்பட்டன.

— செய்தி

" நல்லது, நல்லது, எமக்கு தனி மனிதர் வழிபாட்டில் எள்ளளவும் உடன்பாடு இல்லை"

— மார்க்ஸ், ஏங்கல்ஸ் புதுமைக்கு எழுதிய கடிதத்தில் இருந்து.
லெனின்

www.padippakam.com

Zeitung ( நாளாந்த விற்பனை_ மேற்குஜேர்மனியில் 44 இலட்சம், புதிய சந்தையான கிழக்கு ஜேர்மனியில் 11இலட்சம்) எனும் பிற்போக்கு வலதுசாரிப்பத்திரிகை முதல் விபரல் பத்திரிகைகள் வரை ஆதரவுப்பிரச்சாரம்தான்.( யாவரும் ஜேர்மனியர், கிழக்குஜேர்மன் மக்கள் எம் சகோதரர் என்பதே அடிப்படையாயிருந்தது.) வேலையில்லாதவரும், தொழிலாளர்களும் வாசிக்கும் Bild Zeitung ஆனது ஜேர்மனிய தேசியவாதத்திற்கு எண்ணை ஊற்றுகிறது. இங்குள்ள அகதிகள், வெளிநாட்டவர் மீது கோபம் திசை திருப்பப்படுகின்றது. இங்கு நாம் ஜேர்மனியிற் குருட்டுத்தனமான அதிதீவிரதேசியவெறியானது 45 ஆண்டுகளின்முன் 60 இலட்சம் யூதர்களைக் கொன்றதையும், முதலாம், இரண்டாம் உலகப்போர்களில் பலகோடி மக்கள் கொல்லப்படுவதற்கு காரணமாக




இருந்ததை நினைவில் கொள்ளவேண்டும். இவ்விணைவுக்கும் தேசியவாதமானது முக்கிய பங்கு வகிக்கிறதென்பது மறுக்கமுடியாது இந்தநேரத்தில் பல இடதுசாரிகள், பத்திரிகைகள் (உ+ம்) Tageszeitung) இவ்விணைவை எதிர்த்தாலும் இதைத் தடுக்க முடியாது என்கின்றனர். இதனால் இவ்விணைவுக்கு எதிரான குரல் பலம்குன்றியதாகவுள்ளது.

எனவே இவ்வளவு ஆதரவுப் பிரச்சாரம் மத்தியில் மக்களால் என்ன செய்ய முடியும். மூன்று மாதங்களில் (மார்ச் 89) கிழக்குஜேர்மன் மக்கள் உடன் இணைவை ஆதரித்த மேற்குஜேர்மன் கட்சியின் பிரதிநிதிகளை தெரிவுசெய்ததன்



படிப்பகம்

மூலம் இவைகளிற் பிரச்சார வெற்றியினை அறியலாம்.

## கிழக்கு ஜேர்மன் பொருளாதாரம்

இங்கு கூறப்பட்டதுபோல் கிழக்கு ஜேர்மனியிற் பொருளாதாரமானது நெருக்கடிநிலையில் இருக்கவில்லை (போலாந்து, செக்கொஸ்லவக்கியா, கங்கேரி. போல்) கிழக்கு ஜேர்மனியில் முன்னர் கிட்டத்தட்ட யாவருக்கும் வேலை கிடைத்தது. நவீன தொழிற்நுட்பம், இயந்திரமாக்கல் அதிகம் இடம்பெறவில்லை. ஆனால் மேற்கு ஜேர்மனியிலுள்ள முதலாளித்துவப் பொருளாதாரமுறையில் நவீன தொழில்நுட்பத்திற் மூலம் கூடிய இயந்திரங்களையும், குறைந்த வேலையாட்களையும் கொண்டு அதிக இலாபம் மிட்டும் முறையாகும். எனவே முதலாளித்துவத்தின் உட்புகவால் – அவர்களின் இலாபத்திற்காக கிழக்கு ஜேர்மனியில் பெருந்தொகையினர் வேலைநீக்கப்படுகிறார்கள். வேலையில்லாதவர் தொகை இக்குறுகியகாலத்தில் 8 இலட்சத்திற்கும் அதிகம். அங்கு உற்பத்தியாகிக்கொண்டிருந்த அத்தியாவசிய ஆடம்பரப் பொருட்களைத் தொடர்ந்து விற்கமுடியாதநிலை. மேற்கு ஜேர்மன் தொழிற்சாலைகள் இன்னும் அங்கு இயங்கத் தொடங்கவில்லை. ஆனால் இங்கிருந்து அத்தியவசிய ஆடம்பர பொருட்கள் அங்கு கொண்டு போய் விற்கப்படுகின்றன.

அன்று கிழக்கு ஜேர்மனியில் உணவுப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு என்று கூறப்பட்டது. அங்கு ஒருவருக்கு கிடைக்கக்கூடியதாகவிருந்த இறைச்சியின் பங்கு மேற்குஜேர்மனியில் ஒருவருக்கு கிடைக்கக்கூடிய இறைச்சியின் பங்கைவிட அதிகம்

என்பதை இங்குள்ள பத்திரிகைகளே இன்று ஒத்துக்கொள்கின்றன (Frankfurte Rundschau).

இருந்த போதும் இறைச்சி உட்பட ஏனைய மரக்கறிவகைகள் கிழக்கு ஜேர்மனிக்குள் கொண்டு சென்று விற்கப்படுகின்றன. மேற்குஜேர்மன் பொருட்களின் மோகத்தால் – கிழக்கு ஜேர்மன் பொருட்களுக்கு சந்தை வாய்ப்பில்லை. இதை எதிர்த்து கிழக்கு ஜேர்மன் விவசாயிகள் போராட்டம் நடாத்துகின்றனர்.

எனவே உண்மையில் இப்போதுதான் கிழக்கு ஜேர்மனியின் பொருளாதாரமானது பெரும் நெருக்கடியைச் சந்திக்கின்றது. இங்கிருந்து சென்ற முதலாளித்துவ பொருளாதார அமைப்பானது, கிழக்கு ஜேர்மன் அடிப்படை பொருளாதாரத்தையே வீழ்த்தியதுடன் இலட்சக்கணக்கானவரை வேலையில்லாமல் ஆக்கியுள்ளது. இவர்கள் பிரச்சாரம் செய்தது போலல்லாமல், வருங்காலத்திலேயே பெருமளவில் கிழக்கு ஜேர்மன் மக்கள் வேலை தேடி மேற்குஜேர்மனுக்குள் வர உள்ளனர்.

## முக்கியமாக இவ்விணைவு தொடர்பாக ஏற்படும், ஏற்படப்போகும் மாற்றங்கள் பற்றிய சிறுகுறிப்புகள்:

1. <u>நிறவெறி, தேசியவெறி அதிகரிப்பு.</u>

தற்போது கிழக்கு,மேற்கு ஜேர்மனியில் வெளிநாட்டார் மீதான தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. அகதி நிலையங்கள் எரிக்கப்படுவதும், கறுப்பர்கள் (ஆப்பிரிக்கர், தமிழர்..) துருக்கியர் தாக்கப்படுவதும் சமீபகாலமாக அதிகரித்து அச்சம் தருகிறது. புதிய ஜேர்மனியில்_ மக்களின் பிரச்சனைகளுக்கு வெளிநாட்டவரே காரணம் எனக் காட்டப்படுவர். கிழக்கு

www.padippakam.com

ஜேர்மனியில் தடைசெய்யப்பட்டிருந்த நாசிக்கட்சிகள் தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ளன. கிழக்கு ஜேர்மனியில் வெளிநாட்டவர் (ஆப்பிரிக்கர், வியட்னாமியர்...) கிட்டத்தட்ட யாவரும் வேலைநீக்கப்பட்டுள்ளனர்.

வரும் ஆண்டிலிருந்து வெளிநாட்டவர், அகதிகள் மீதான சட்டரீதியான அடக்குமுறைகளும், மற்றும் தாக்குதல்களும் அதிகரிக்கும்.

## 2. பெண்கள் மீதான அடக்குமுறைகள்.

கிழக்கு ஜேர்மன் பெண்களுக்கு மேற்கு பெண்களைவிட சில உரிமைகள்கிடைத்திருந்தன. முக்கியமாக கரு வைத்திருப்பது / கலைப்பது தொடர்பாக பெண்களுக்குள் முடிவுசெய்யும் உரிமையை சட்டரீதியாக கிழக்கு ஜேர்மனியில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. ஆனால் மேற்குஜேர்மனியில் இவ்வுரிமை பெண்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது. எனவே இணைவையடுத்து கிழக்குஜேர்மன் பெண்களும்




இவ்வுரிமையை இழப்பர்.

தற்போது கிழக்குஜேர்மனியில் இடம்பெறும் வேலைநீக்கத்தில் பாதிக்கப்படுபவர்களும் பெருமளவு பெண்களே. 52% மான பெண்கள்வேலையை இழக்கும் அதேவேளையில் புதிய வேலையாட்கள் சேர்ப்பதில் பெண்களை 24% வீதமே சேர்த்துக்கொள்ளுகின்றனர். இதன்மூலம் ஓரளவு கிடைத்திருந்த பொருளாதாரசுதந்திரத்தை இழக்கின்றனர்.

மற்றும் கிழக்கு ஜேர்மனியில் தடைசெய்யப்பட்டிருந்த விபச்சாரவிடுதிகள், பெண்களைக் கேளிக்கைப்பொருட்களாகக் காட்டப்படும் நடன விடுதிகள், திரைப்படங்கள்(Porno) , செக்ஸ்


படிப்பகம்

புத்தகங்கள் கிழக்கு ஜேர்மனியில் தற்போது ஆண்களின் பெரும் ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. எனவே இவ்விணையடுத்து கிழக்குஜேர்மன் பெண்கள் கிடைத்திருந்த உரிமைகளை பறிகொடுக்கின்றனர். இணைந்த புதிய ஜேர்மனியில் ஆணாதிக்கம் இன்னும் வலுவடையும்.


3. வேலையில்லாத்திண்டாட்டம்

வேலையில்லாதவர் தொகை மிக மிக குறைவாக அல்லது இல்லாதிருந்த நாட்டில் தற்போது வேலையில்லாதோர் தொகை 8 இலட்சத்திற்குமதிகம். ஒவ்வொருவாரமும் 25 ஆயிரம் பேர் தாம் வேலையில்லாதவர் என பதிவுசெய்கின்றனர்.

4. புதியஜேர்மனியின் பொருளாதாரம்.

முன்பு கிழக்குஜேர்மனி, நிக்கரகுவா கோப்பியை அதிக விலைகொடுத்து (மேற்குஜேர்மனி – வேறு நாடுகளிலிருந்து மலிவாக இறக்குமதி செய்தவேளை) வாங்கியது. தற்போது இது நிறுத்தப்பட்டுள்ளது.
–இது ஒரு சிறு உதாரணம்.
எனவே வருங்காலத்தில் இணைந்த ஜேர்மனியானது 'மூன்றாம் உலகத்தின்' மூலவளங்கள் முதல் உணவுப் பொருட்கள்வரை மலிவு விலையில் வாங்கியும், இங்கு உற்பத்தியாகும் பொருட்களை, ஆயுதங்களை மூன்றாம் உலகிற்கு விற்பதன் மூலமும் இன்னும் கொடூரமாக சுரண்டி கொள்ளையடிக்கும். மற்றும் கிழக்கு ஜேர்மன் தொழிலாளர், சாதாரண மக்களின் மீதான சுரண்டலையும் அதிகரிப்பதன்மூலம் செத்துக்கொண்டிருக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இடத்தை புதிய ஜேர்மனி பிடித்துக் கொள்ளும். 1992 இல் ஏற்படவுள்ள புதிய ஐரோப்பிய கூட்டுறவிலும் மற்றைய ஐரோப்பிய நாடுகளில் மேற்கு ஜேர்மனி ஆதிக்கம் செலுத்தும். ஒரு சில பல்தேசியக்கம்பனிகள்– சிறிய

www.padippakam.com



கம்பனிகளை விழுங்கி தமது சுரண்டலைக் கூர்மைப்படுத்தும். ஜேர்மனியில் வரிகள் உயர்த்தப்படவுள்ளன. இதனால் பாதிக்கப்படவிருப்பது சாதாரண மக்களே. "நாம் இன்று கிழக்கு ஜேர்மனிக்கு வழங்கும் பணமானது 2000 ஆண்டளவில் *100 மில்லியார்டன்* டொச்மார்க் இலாபத்தை எமக்கு வழங்க இருக்கின்றது" என்று மேற்குஜேர்மன் அதிபர் ஹெல்மூட் கோல்("Die Zeit" July) அன்று மேற்குஜேர்மன் மக்களுக்கு கூறினார். இங்கு அவர் குறிப்பிடும் நாங்கள் என்பது— மேற்குஜேர்மன் மக்கள் நம்புவது போல் அவர்களையல்ல, ஒரு சில முதலாளிகளையே. இவரின் இக்கூற்று இணைவின் உண்மை நோக்கைப் புரியவைக்கிறது. முன்பு அமெரிக்கா மேற்குஜேர்மனியில் பெருமளவு மூலதனத்தையிட்டு நொருங்கியிருந்த ஜேர்மன் முதலாளித்துவத்தை இப்போதுள்ள பலமான நிலைக்கு கொண்டுவந்ததோ அதேபோல மேற்குஜேர்மனி முதலாளித்துவமும் தாம் தற்போது கிழக்கு ஜேர்மனியில் முதலீடு செய்யும் மூலதனமானது 'ஒரு பொருளாதார அதிசயத்தை' நடாத்தும் என நம்புகிறார்கள்.

'மூன்றாம் உலக'நாட்டினராகிய நாம் நம்பிக்கொண்டிருக்கும் 'ஜனநாயகத்தில்'— 'சுதந்திரமான


படிப்பகம்

www.padippakam.com

தொடர்புச்சாதனங்கள்' முதலாளித்துவத்தின் நன்மைக்காக எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதைச் சிறிதுபார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

முதலாளித்துவ ஜனநாயகம் பற்றிய தனது பெரும் பொய் பிரச்சாரத்துடன் ஜேர்மன் மக்களின் தேசியவாதத்தைப்' பயன்படுத்தி தனது வெற்றியை இங்கு சாதித்துள்ளது.

---

## — கண்டதும் கேட்டதும் —

சோசலிசம் இல்லாத சுதந்திரம் தனிப்பட்ட சிலருக்கு சலுகை அளிப்பதும், அநீதியானதுமாகும். சுதந்திரமில்லாத சோசலிசம் அடிமைத்தனமானதும் கொடூரமானதுமாகும். — மிக்சேல் பகுனின்.

பிரஸ்ரோறிக்காவும் கிளாஸ் நோஸ்டும் கிழக்கு ஐரோப்பிய "சோசலிச" நாடுகளுக்கு மாத்திரம் உரியதல்ல. தமிழ் ஈழ மண்ணிலும் இது ஒரு அவசிய நிற்பந்தம்.
புதுமை இல:5

கிளாஸ்நோஸ்டும், பிரஸ்ரோறிக்காவும் தமிழ் மக்களுக்கு என்றுமே விளங்காத புதிர்களாகத்தான் இருக்கும்.
தேனி மாரச் 1990.

மக்களின் விருப்பத்தை இயக்கங்கள் குத்தகைக்கு எடுத்தது என்னவோ தெரிந்ததுதான், ஆனால் மக்களின் அறிவை எப்போ "தேனி" குத்தகைக்கு எடுத்தது?

"நாம் எவ்வளவு பிழை செய்தாலும் எம் இனத்தின் தாயானவள் ( தமிழ் நாடு ) பொறுத்து எம்மை அரவணைக்கிறாள்.
(ஈழத்தில் இருந்து வந்த கடிதத்திலிருந்து.)



படிப்பகம்

www.padippakam.com
ஊழித்.....(40ம் பக்கத் தொடர்ச்சி)

"அவனனை சொல்லு கேட்கிறானில்லை உங்காலை சொத்தி ஆச்சி வீட்டை போனவன்"

"ச்சி.. அவன் அங்கையில்லையடி அத்தான் வீட்டிலைதான் நிற்கிறான்"

"எணையம்மா அத்தான் எல்லே இண்டைக்கு அழுதவர்"

"ஏனடி பிள்ளை"

"பிறந்து 15 நாள் கூட ஆகேல்லை அத்தான்ரை அக்கா பிள்ளையைத் தூக்கிக்கொண்டு பதுங்குகுழிபடிக்கை இறங்க... அத்தான் அழுகுது"

"என்னடி செய்யிறது நாசமத்து போவான்களோட "

"என்ன சத்தம் ஒண்டையும் காணேயில்லை பொம்பர் போவிட்டுதோ பாருங்கோ"

இராசம்மாவின் புருசன் குரல் கொடுத்தார்.

பதுங்குகுழி நுனியில் ஏறிவானத்தை நோட்டமிட்டாள் இரண்டாவது மகள் கிளி.

"காணேயில்லை போவிட்டாங்கள் போலை"

பதுங்குகுழியை விட்டு எறும்பு புற்றில் இருந்து வருவது போல் வெளியில் வந்தார்கள்.

கிளி மாமரத்தில் தொங்கிய மாங்காயைப் புடுங்கிக்கடித்தாள்.

கணேசன் ஓடிவந்தான். மூச்சஇரைத்தது.

"அம்மா ஹெலி மேற்காலை வயலுக்கை நிற்கிறதாம்"

ஊரை மரணதேவன் கலைக்க ஆரம்பித்தான்.

அகப்பட்டதை தூக்கியவர் பாதி. தூக்காதவர் பாதியாய்

அம்மா எங்கே? பிள்ளை எங்கே? புருசன் எங்கே?

பெஞ்சாதி எங்கே?

தேடியவர் பாதி தேடாதவர் பாதியாய்

ஓட ஆரம்பித்தார்கள்.

ஓட்டம்... ஓட்டம்..

கண்டியள், குச்சொழுங்கை, கிணறு, எதிரே நின்ற மரம்.

எதுவும் தெரியவில்லை

குழந்தைகள் அலறியன. வேலிகள் சரிந்தன
வயிற்றுப்பிள்ளைதாச்சிகள், தொண்டுகிழங்கள்
வயிறுகுலுங்க, சரீரம் பதற.
மரணபீதியோடு
ஆயிரம் ஆயிரம் சில்வண்டுகளின் அலறல் போல்
குய்.... ஐயோ....
திசை தெரியாமல், பாதை தெரியாமல்
உயிர் ஒன்றுதான் உடலின் சொத்தாய்...

நாகன் நடுநடுங்கி போனான். வயலின் ஓரத்தில் அவன் வீடு.
மகள், மருமகள்.
மகன். பிஞ்சுமகன்.
ஐயோ... வார்த்தை வெளியில் வரவில்லை.
கையை தலையில் வைத்தபடி அரற்றினான்.
சத்தம் குறைந்தது.
ஹெலிகள் வயலைவிட்டு கிளம்பி விட்டதாம்.
பெருமூச்சு சூரியனை விரட்டியது.
இருட்டுபரவ ஆரம்பித்தது.
ஓடிய சனங்கள் வீடுகளில் புகுந்துகொண்டனர்.
நாகன் வீட்டை நோக்கி நடந்தான்.
"என்னன்டு பிள்ளையள் தப்பினனியள்"
மகனையும் மகளையும் கட்டியபடி நாகன் அழுதான்
சரீரம் குலுங்கியது.

"அப்பா ஹெலிவந்து வயலுக்கை நிண்டதும்
பதுங்குகுழியுக்கை நிண்டா ஆபத்து எண்டு போட்டு
நான் தான் தம்பியையும் கூட்டிக்கொண்டு...
பத்தையளாலலை பதுங்கி பதுங்கி
மடத்தடிபிள்ளையார் கோயிலுக்கு போனனான்"
நாகன் மகளின் முகத்தை பார்த்தான்.

பயம் தெரிந்தது. கால்களில் நாயுருவி கிறி ரத்தம் கசிந்தது.

இருட்டு அதிகரித்தது.அமாவாசை இருட்டு.
கொட்டிலுக்குப் பக்கத்தில் நின்ற மரங்கள் ஆடியது வயல் அகண்ட பெருவெளியாய் விரிந்தது.
குப்பிவிளக்கு மினுங்கியது.
மகனின் கீறல்களுக்கு குப்பமேனியும் வெட்டொட்டியும் கசக்கி தேய்த்தான். மகனும் காலைக்காட்டினான்.

திடிரென்று, வானத்தில் ஒளிப்பிளம்பு.பேரொலி, டும்...
அதுவென்ன வானத்தில் வருவது.
ரொக்கெட்டா.. இல்லை. அக்னி அஸ்திரமா..
செக்க செவெலன ரத்தஒளியை பாய்ச்சியபடி...
கொல்லன்பட்டரையின் இராட்சத நெருப்புத் துண்டம் போல் வந்து கொண்டிருந்தது.
ல்....ல்...
பிள்ளை விழுந்து படணை என்றவாறு
மகனையும் அழுத்தி படுக்க வைத்தவாறு
மண்ணில் சரிந்தான் நாகன்.
தொம்... என்ற பேரொலியோடு வயல்வெளியில் அதுவிழுந்தது.
மண்வாரி கொட்டியது. துண்டங்கள் சிதறியது.
பெரும் எரிமலை போல் புகை.
"ஐயோ பிள்ளையாரே எங்களை காப்பாற்று"
நாகன் மனம் ஓலமிட்டது.
மரங்கள் சரிந்து விழுந்தது.
துண்டுப்பட்ட பனைமரம். நாகன் கொட்டில் சிதைந்தது.
நாகனின் காலில் ஏதோ பாய்ந்தது.
ஆ... ஐயோ
சின்னத்துண்டு. காயம். ரத்தம்.
நாகன் படுத்திருந்து வானத்தை பார்த்தான்.

வேறு திசைகளிலும் நெருப்புக்கோளம் பாய்ந்தது.

நாய்களின் குரைப்பும், மனிதர்களின் ஓலமும் தூரத்தில் கேட்டது.

விடிந்தது. சூரியகதிர்கள் இருள் சீலையை உருவியது.

ஊழிக்கூத்து ஆடிய மேடை போல்

உருக்குலைந்து கிடந்தது நாகனின் கொட்டில்.

நாகனின் காலில் சீலைத்துண்டு கட்டு.

கெந்தியபடி எழுந்தான் நாகன்.

ஊர்ச்சனங்கள் செல் விழுந்த இடத்தை விடுப்புபார்த்து போனார்கள்.

"அப்பா உந்தகாலோடை எங்கை போறாய்"

"சும்மா இரு பிள்ளை வயித்துபாட்டுக்கு எதாவது பார்த்து கொண்டு வாறன்"

சந்திகளிலும் குச்சொழுங்கைகளிலும் வீட்டுமுற்றங்களிலும் சின்ன சின்னக் கூட்டம்.

"இனி இஞ்சை இருக்கிறது விசர்வேலை எண்டு நாதன் குடும்பம் இந்தியாவுக்கு போகுதாம்"

"எப்படி போயினம்"

"உங்கை திருவடிநிலையிலிருந்து வேலணையிலிருந்து போட் போகுதாம்.

"எவ்வளவு காசாம்"

"மூவாயிரம் கேட்கிறாங்களாம்"

"ஓ..நாதர்குடும்பம் சவுதிக்காக. போவாங்கள் தானே"

"கொழும்புக்கு போகலாமெண்டாலும் ஜேர்மன். பிரான்சுக்கு ரை பண்ணலாம்"

ஊர்முழுக்க கதை வேலி பாய்ந்தது.

நாதன் குடும்பம், சிவம் குடும்பம், பாலர்குடும்பம் இந்தியாவுக்கு போகுதாம்.

"ஓ சவுதிக்காக. பிரான்ஸ் காசு அவன்களை காப்பாற்ற போவுது"

சனங்கள் முகங்களில் இன்னும் பீதி ஏறியது.

ஐயோ இவங்கள் எல்லாம் தப்ப, நாங்க மட்டும் சாகவோ

எல்லா இடமும் இதே கதை.

www.padippakam.com

காகபிரட்ட முடிந்தவர்கள், காகபிரட்ட தொடங்கினார்கள்

நாகன் மௌனமாக வீட்டை நோக்கி நடந்தான்.

என்னசெய்யிறது?

குமர்பிள்ளை, நான், பெடியன் மூன்று பேரும்

அடுத்தவேளை சாப்பாட்டுக்கே...தாளம் போடுறம்.. நாங்கள் எங்கை போறது...

போட்காரரையும், ஓட்டிகளையும் தேடித்திரிந்தனர்

காக புரட்டியவர்கள்.

சைக்கிள்கள் பறந்தன.

திருவடிநிலைக்கும், மாதகலுக்கும்.

இல்லாதவர்கள் அன்றாடம் காய்ச்சிகள்

உயிரை கையில் பிடித்தபடி....

செம்பாட்டான் தோட்டத்திற்குபோய் கண்டனையும்

கந்தனையும் கூட்டிக்கொண்டு வந்து

கொட்டிலை சரிபடுத்த வேணும். நாகன் மனதிற்குள் திட்டம்போட்டான்

உச்சிவெயில் ஏறியது.

---

## — கண்டதும் கேட்டதும் —

"நீ அடுத்த முறை இங்கு வரும் போது நாங்கள் உயிருடன் இருக்கமாட்டோம். எங்களை செவி சுட்டுச் சாக்காட்டிப் போய்விடும். எங்களையும் உன்னுடன் ஜேர்மனிக்கு கூட்டிக் கொண்டு போ."

ஜேர்மனியில் இருந்து தமது மகளை அழைத்துவரச் சென்ற திருமதி. விஜயலோசனி பாலச்சந்திரன் தனது மகளுடன் விளையாடிக் கொணடிருந்த சிறுவர்கள் தனது மகளைக் கேட்டதாக ஏலையா ஆசிரியருக்கு கூறியது.

_ எங்கள் மண்ணில் சில நாட்கள் _ ஏலையா 32



படிப்பகம்


www.padippakam.com

மறுத்தலியலின் சக்தியாக மாறுவோம்.

# புதுமை

ஆண்டுச்சந்தா
உள்ளூர் **20** DM
வெளிநாடு US$**15**

தொடர்புகளுக்கு:
PUTHUMAI
Mainzer Landstr. 147,
6000 Frankfurt 1
West Germany.




விமர்சனம் என்பது தலையின் பிரச்சனையல்ல.
பிரச்சனைகளின் தலை.

படிப்பகம்

www.padippakam.com

முழுமையானதும் நிலையானதும் பிழையானது.



விமர்சனம் என்ற ஆயுதம் ஆயுதங்களால் செய்யபபடும் விமர்சனங்களுக்கு மாற்றீடாக இருக்க முடியாது.

படிப்பகம்